விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 154 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 08 திங்கட்கிழமை (22.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## புலிகளுடன் போர் மட்டுமே முடிந்தது

ஜனாதிபதி ரணில் 8 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் முதலிடுங்கள்

புலம்பெயர் தமிழர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு 3 ஆம் பக்கம் பார்க்க

## ஜி.எஸ்.பி சலுகை மீள கிடைக்கும்

இலங்கை நம்பிக்கை 3 ஆம் பக்கம் பார்க்க

### தீர்க்கமான முடிவெடுத்த பின்

# தேசிய இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைக்கு வாருங்கள்

### ஜனாதிபதியிடம் சம்பந்தன் பகிரங்க கோரிக்கை



(கொழும்பு)

தேசிய இனப் பிரச்சினைக் கான தீர்வினை காண்பது குறித்து தீர்க்கமான முடிவொன்றை எடுத் துக்கொண்டு பேச்சுவார்த்தை களை முன்னெடுக்குமாறு ஜனாதி பதியிடம் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந் தன் பகிரங்க கோரிக்கை விடுத் துள்ளார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துடன் முன்னெடுக் கப்பட்ட பேச்சுவார்த் தையின் அடுத்த கட் 15

### தற்போது இலங்கையில்

# முதலீடு செய்ய அமெரிக்கா ஆர்வம்

### அமெரிக்க தூதுவர் ஜூலி சங்



(கொழும்பு)

தற்போதைய சூழ்நிலையில் இலங்கையில் முதலீடு செய்வதில் அமெரிக்க முதலீட்டாளர்கள் ஆர்வமாக உள்ள தாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## நெல் விவசாயிகளுக்கு இன்று முதல் வவுச்சர்

### விவசாய அமைச்சு

(கொழும்பு)

சிறுபோகத்தில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு உரம் கொள்வனவு செய்வதற்கான மானிய வவுச் சர்கள் வழங்கும் நடவடிக்கை இன்று முதல் ஆரம் பிக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. 15

### 500 கிலோ நிறையுடைய

## விமானக் குண்டு கிளிநொச்சியில் மீட்பு



(கிளிநொச்சி)

சுமார் 500 கிலோ நிறையுடைய அதிசக்தி வாய்ந்த விமானக் குண்டு, கிளி நொச்சி தர்ம 15

## அனைத்து மதஸ்தலங்களையும் பதிவு செய்வதற்கு நடவடிக்கை

### புத்தசாசன அமைச்சர் விதுர

(கொழும்பு)

அனைத்து மத ஸ்தலங் களையும் மத நிறுவனங்களை யும் பதிவு செய்வதற்கு நட வடிக்கை எடுக்கப்படும் என புத்தசாசன அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பான அமைச் சரவை பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என அமைச் சர் தெரிவித்தார்.

நாட்டின் பல பாகங்களி லும் அனுமதியின்றி ஏராள மான நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 15

## தனியார் வகுப்புகளுக்கு ஞாயிறு விடுமுறை

### யாழ்.மாவட்ட அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்.மாவட்டத்தில் இயங்கும் தனியார் வகுப்புகளுக்கு விடு முறை வழங்குவதற்கான முயற்சியை மேற்கொள்ள வுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சிவபாலசுந்தரன் தெரி வித்தார்.

யாழ்ப்பாணம் இந் 15

## தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணையும்

### தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை நம்பிக்கை



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணையும் என தமிழரசுக் கட் சித் தலைவர் மாவை சேனாதி 15

## வேலணை மத்திய கல்லூரியில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணை மத்திய கல்லூ ரியின் அதிபராக சைவ சமயத் தவர் ஒருவரை நியமிக்கக் கோரி இன்று பாடசாலை முன் றலில் கவனயீர்ப்புப் போராட் டம் இடம்பெறவுள்ளது.

தற்போது வேலணை மத் திய கல்லூரியின் அதிபராக இருப்பவர் ஓய்வுபெற்றுச் செல் வதையடுத்து, அக்கல்லூ ரிக்கு பிறமதத்தைச் சேர்ந்த ஒருவரை அதிபராக நியமிக் கும் முயற்சிகள் இடம்பெறுவ தாக அறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் சைவப் பாரம்பரியமிக்க இக் கல்லூரிக்கு சைவ 15

## கரவெட்டியில் சடலம் மீட்பு

(கரணவாய்)

கரவெட்டி கிழக்கு காட் டுப்புலம் பகுதியில் நபர் ஒருவரின் சடலம் கண்டெ டுக்கப்பட்டுள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த கந்தப்பு ஞானேஸ் வரன் (வயது-63) என்ற நபரே சடல 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கீரிமலையில் 48 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- கீரிமலையில் இருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- கீரிமலை சிவன் கோவில் (நகுலேஸ்வரம்) இருந்து 1 km தூரம்.
- திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
- காணியின் வடக்கு எல்லை – கடல், தெற்கு எல்லை – பிரதான காபற் வீதி முகப்பு (மாதகல் – கீரிமலை).

(15592)

**076 911 9371**
**077 874 8135**


# துப்பாக்கி சூடு; ஒருவர் பலி

மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத இருவரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் அம்பாந்தோட்டை - சிறி போபுர பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும், குறித்த சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7)


# R.O சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (Reverse Osmosis)

**மேற்படி விற்பனையாளர் கவனத்திற்கு (வடமராட்சி)**

மேற்படி வியாபார விற்பனை உரிமம் பெறுவதில் பிரதேச சபைகளுக்கு இடையே வேறுபாடு காணப்படுவதுடன் வேறுபட்ட நிபந்தனைகளை முன்வைக்கின்றனர்.

மேற்படி பிரச்சினை உட்பட பல பிரச்சினைகளை நாம் எதிர்நோக்க வேண்டியிருப்பதால் எமது சேவையை ஒரு முகப்படுத்தி ஒரு நிறுவன அமைப்பில் செயற்பட வேண்டியுள்ளது.

ஆதலால் வடமராட்சியில் R.O குடிநீர் விற்பனையாளர்கள் கீழ்வரும் (Contact No.) தொலைத்தொடர் எண்களுடன் தாமதமின்றி தொடர்பு கொள்ளவும்.

'ஒற்றுமையே பலம்'

ப.ஈஸ்வரநாதன் (RAVEENS E.M.C)
சிங்கத்தின் வீடு,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

T.P : 021 226 3321
076 416 9845
Whatsapp : 076 416 9845

(C-6597)


# கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி பிரிவு பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர் **கோ.கௌரிதாஸன்** அவர்களின் பாசமிகு தாயார்

**கோபாலபிள்ளை பரமேஸ்வரி**

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திகின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!**

**யாழ். மாவட்டம்**
**விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் சங்கம்.**

(C-6598)

# துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் கணித பாட ஆசிரியை திருமதி **கிரிஜா ரங்கதாஸ்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி ஆனந்தசிங்கம் கனகாம்பிகை**



அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயரடைகின்றோம். அவரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
**யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை**

(15591)

தில்லையம்பதியாள் துணை

**சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி**

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

## நாற்பத்தெட்டாவது ஆண்டு

## வசந்த வைகாசி மஹோற்சவ பெருவிழா - 2023



**23.05.2023** செவ்வாய் முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றம்
**25.05.2023** வியாழன் இரவு 7.30 மணிக்கு அன்னச்சப்பறம்
**27.05.2023** சனி இரவு 7.30 மணிக்கு பூச்சப்பறம்
**28.05.2023** ஞாயிறு இரவு 7.30 மணிக்கு வசந்தோற்சவம்
**29.05.2023** திங்கள் இரவு 7.30 மணிக்கு கைலாசவாகனம்
**01.06.2023** வியாழன் பிற்பகல் 2.00 மணிக்கு வேட்டைத்திருவிழா (ஸ்ரீஞான வைரவர் ஆலயம்)
இரவு 7.30 மணிக்கு சப்பறத்திருவிழா
**02.06.2023** வெள்ளி முற்பகல் 10.30 மணிக்கு ரத உற்சவம் (தேர்)
**03.06.2023** சனி முற்பகல் 10.30 மணிக்கு பூரணைத் தீர்த்தோற்சவம்
**04.06.2023** ஞாயிறு இரவு 7.30 மணிக்கு பூங்காவனத் திருவிழா
**05.06.2023** திங்கள் காலை 6.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம்
இரவு 7.30 மணிக்கு வயிரவர் பொங்கல் மடை
**12.06.2023** திங்கள் பி.ப 3.00 மணிக்கு வைகாசிப் பொங்கல் விழா

### தினசரி உற்சவம்

காலை 7.30 மணிக்கு அபிஷேகம், முற்பகல் 9.00 மணிக்கு மூலஸ்தான பூஜை, முற்பகல் 9.30 மணிக்கு ஸ்தம்ப பூஜை, முற்பகல் 10.30 மணிக்கு வசந்தமண்டப பூஜை, முற்பகல் 11.30 மணிக்கு அம்பாள் வீதி உலாவரும் காட்சி, மாலை 5.00 மணிக்கு சாயரட்சை பூஜை, மாலை 5.30 மணிக்கு ஸ்தம்ப பூஜை, மாலை 6.30 மணிக்கு வசந்தமண்டப பூஜை, இரவு 7.30 மணிக்கு அம்பாள் வீதி உலாவரும் காட்சி

**மஹோற்சவ பிரதமகுரு**
**சிவப்பிரம்மஸ்ரீ சிற்சபேச சிவகணேச குருக்கள்**

**திருக்கோயில் நித்திய அர்ச்சகர்**
**பிரம்மஸ்ரீ பரமகோகுலேஸ்வரக் குருக்கள்**
(தில்லையம்பதி)

(C-6595)

மஹோற்சவ காலங்களில் தினமும் அன்னதானம் இடம்பெறும்


ஈழத்து தில்லையம்பதி "தில்லையம்பதியாள் சிவகாமி சுந்தரியே சரணம்" திருக்கோயில் பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் முதலீடு செய்யுங்கள்; புலம்பெயர் தமிழர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

**போரினால் ஏற்பட்ட அச்சநிலை காரணமாக இடம்பெயர்ந்து பன்னாடுகளிலும் வாழும் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் வர்த்தகங்களை முன்னெடுக்கவும் முதலீடுகளை மேற்கொள்ளவும் வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்குத் தேவையான ஒழுங்குகளை செய்யுமாறும் ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.**



ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே இந்த விடயத்தை ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதன்போது ஜனாதிபதியிடம் கருத்துரைத்த ஐ.தே.க.வின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, புலம்பெயர் தமிழர்கள் பலர் இலங்கையில் அபிவிருத்தி பணிகளுக்கு ஒத்துழைக்க விரும்புகின்றனர். எம்முடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடினர்.

குறிப்பாக, ஜனாதிபதியின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க புலம்பெயர் தமிழர்கள் ஆர்வமாக உள்ளனர். உண்மையில், அவர்கள், நெருக்கடியான இந்த நிலையில் இலங்கைக்கு உதவுவதற்கு தயாராகவே உள்ளனர். சம்பிரதாயபூர்வமான தமிழ் அரசியல் கட்சிகள் மீது புலம்பெயர் தமிழர்களுக்கு தற்போது நம்பிக்கை இல்லை. அவர்கள் அதனை விரும்பவும் இல்லை.

இலங்கையில் வாழும் தமிழர்களின் வாழ்வியலில் வளமான மாற்றத்தையே புலம்பெயர் தமிழர்கள் விரும்புகின்றனர். வடக்கு, கிழக்கில் உள்ள இளையோரும் அதனையே கோருகின்றனர்.

எதிர்வரும் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் வடக்குக்கு மீண்டும் செல்லவுள்ளேன். எனவே, இந்த நேரத்தில் அனைவரையும் ஒன்றிணைத்து பயணிப்பது சிறந்தது என்று நீண்ட விளக்கத்தை அளித்தார்.

இதற்கு மறுமொழியளித்து ஜனாதிபதி ரணில் கூறுகையில், புலம்பெயர் தமிழர்களை இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள அழையுங்கள்.

அவர்களுக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்குங்கள். அரசியலில் ஈடுபடும்போது, உலக அரசியல் போக்கை போன்று தேசிய அரசியல் நகர்வுகள் குறித்தும் மதிப்பாய்வு செய்யுங்கள். இது அனைவருக்கும் முக்கியமானது என தெரிவித்தார். (நி)

## இலங்கையில் இருந்து கடத்தப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான அம்பர் இந்தியாவில் பறிமுதல்- 4 பேர் கைது

(சென்னை)

இலங்கையருக்கு சொந்தமான பல கோடி ரூபாய் பெறுமதியான அம்பர் இந்தியாவில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் 31.67 கோடி ரூபாய்க்கு விற்கப்பட இருந்த 18 கிலோ 100 கிராம் அம்பருடன் 4 பேரை இந்திய புலனாய்வுப் பிரிவினர் கைது செய்தனர்.

இலங்கையில் கடத்தல்காரர் ஒருவரிடமிருந்து பெறப்பட்டதாக கூறப்படும் அம்பர் எனப்படும் திமிங்கல வாந்தி விற்பனைக்கு தயாராக இருந்த நிலையில் பறிமுதல் செய்யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

திமிங்கலங்களின் வாந்தியாகக் கருதப்படும் அம்பர், அதிக மதிப்புள்ள வாசனை திரவியங்கள் மற்றும் மருந்துகள் தயாரிக்க பயன்படுகிறது.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் 54 கோடி இந்திய ரூபா பெறுமதியான அம்பர் தென்னிந்தியப் பாதுகாப்பு படையினரால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை மீள கிடைக்கும் என இலங்கை நம்பிக்கை

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்துடனான ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை பெறுவதற்கான அனைத்து விதிமுறைகளுக்கும் இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

2024 ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படும் அடுத்த 10 வருடத்திற்கான புதிய விதிமுறைகளை ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்துள்ளது.

அடுத்த ஆண்டு புதிய நன்மைகள் நடைமுறைக்கு வரும் அதேவேளையில், தற்போது இலங்கை போன்று குறித்த சலுகைகளைப் பெறும் நாடுகளுக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சலுகைகளுக்கு மீண்டும் விண்ணப்பிக்கவும் அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்தப் பலன்கள் தொடர்ந்து பெறப்படும் என்றும் இலங்கை அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் இந்த இறுதி மதிப்பாய்வு அறிக்கையை அடுத்த மாதத்திற்குள் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றுச் சூழல் மற்றும் நல்லாட்சி ஆகியவற்றில் சர்வதேச தரத்துடன் தொடர்புடைய 27 உடன்படிக்கைகளுக்கு இலங்கை வழங்கிய இணக்கம் இதில் வெளியிடப்படும்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையின் ஒழுங்குமுறையின் கீழ் 27 உடன்படிக்கைகளுக்கு வழங்கிய உறுதிமொழிகளை செயற்படுத்துவதை இலங்கை அரசாங்கம் நிரூபிக்க வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

## நாளொன்றுக்கு 400 க்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவு

(கொழும்பு)

நாட்டிற்கு நாளொன்றுக்கு 400 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகி வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

மழையுடன் கூடிய காலநிலை காரணமாக நாளுக்கு நாள் அதிகரித்து வரும் டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்கள் நாடளாவிய ரீதியில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் உள்ள 370 மருத்துவ அதிகாரி பிரிவுகளில் 59 டெங்கு அபாய பிரிவுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு கூறியுள்ளது.

இலங்கையில் 50 வீதமான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலும் இதேவேளை வத்தளை, நீர்கொழும்பு, களனி, மஹர மற்றும் ஜாஎல பிரதேசங்களிலும் அதிகளவானவர்கள் பதிவாகியுள்ளனர். (நி)

## கோடிக்கணக்கில் பணத்தை அச்சிடும் மத்திய வங்கி

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி கடந்த வாரத்தில் 189 பில்லியன் ரூபாய் புதிய நாணயத்தை அச்சிட்டுள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் மத்திய வங்கி ,மேலும் 180 பில்லியன் ரூபாவை அரசாங்கத்திற்கு கடனாக வழங்கியுள்ளது.

அதற்கமைய, கடந்த வாரம் இலங்கை மத்திய வங்கி அரசாங்கத்திற்கு வழங்கிய மொத்த கடன் தொகை 369 பில்லியன் ரூபாவாகும்.

சமகால மத்திய வங்கி ஆளுநராக நந்தலால் வீரசிங்க கடந்த வருடம் ஏப்ரல் மாதம் நியமிக்கப்பட்டதன் பின்னர் இதுவரை 1061 பில்லியன் ரூபா பெறுமதியான புதிய நாணயம் அச்சிடப்பட்டுள்ளது. (நி)

## அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு புதிய இணைப்பாளர்

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு புதிய இணைப்பாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கூட்டத்தில் புதிய இணைப்பாளர் தெரிவு இடம்பெற்றதாக அந்த ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மது ஷான் சந்திரஜித் புதிய இணைப்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக முன்னாள் இணைப்பாளர் வசந்த முதலிகே அறிக்கை ஒன்றை விடுத்துத் அறிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்சல்வடோர் கால்பந்தாட்டப் போட்டியில் நெரிசலில் சிக்குண்டு 12 பேர் உயிரிழப்பு

எல்சல்வடோரில் கால்பந்தாட்டப் போட்டியொன்றில் இடம்பெற்ற தள்ளுமுள்ளில் சிக்குண்டு 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

எல்சல்வடோரின் தலைநகர் சான்சல்வடோரில் உள்ள கால்பந்தாட்ட மைதானத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஏழு ஆண்கள் உட்பட 12 பேர் தள்ளுமுள்ளில் சிக்குண்டு பலியாகியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அலையன்சா மற்றும் சன்டா அனா அணிகளிற்கு இடையிலான போட்டியின்போதே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதனை தொடர்ந்து போட்டி இடைநிறுத்தப்பட்டது.



மைதானத்திற்குள் நுழைவதற்கான நுழைவாயில் கதவுகள் மூடப்பட்டிருந்த நிலையில் பெருமளவு ரசிகர்கள் உள்ளே நுழைய முற்பட்ட வேளை இந்த தள்ளுமுள்ளு இடம்பெற்றுள் ளது. (நி)

# மணிவிழா

## வாழ்த்து



BEST WISHES

எமது பாடசாலையில் ஆசிரியராக இருந்து
இன்று (22.05.2023) தனது அகவை அறுபதில் ஓய்வுபெறும்

**திருமதி செல்வகுமாரி கனகசபாபதி**

அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவரின்
ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/கலட்டி மெ.மி.த.க.பாடசாலை

# இலங்கை கிரிக்கெட்டின் தலைவராக ஷம்மி சில்வா



இலங்கை கிரிக்கெட்டின் தலைவராக மீண்டும் ஷம்மி சில்வா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் வாக்கெடுப்பின்றி அவர் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் 2023 முதல் 2025 வரையில் இலங்கை கிரிக்கெட்டின் தலைவராக செயற்படவுள்ளார். (4)

# மரண அறிவித்தல்



## யோகராசா யோதீஸ்

பத்தானை விதி தாவடி தெற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகராசா யோதீஸ் அவர்கள் (21.05.2023) நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகராசா மற்றும் உதயராணி தம்பதியரின் அன்பு மகனும் உமாந்தினி, அரவிந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோணேஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்ற உமாமகேஸ்வரன் (ஜேர்மன்), தர்மராஜா, சண்முகராசா, நகுலேஸ்வரன், வசந்தராணி ஆகியோரின் அன்பு மருகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
(C-6599) குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## இராஜரட்ணம் நாகபூசணி

காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் மானிப்பாய் லோட்டஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் நாகபூசணி அவர்கள் (21.05.2023) நேற்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் இராஜரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, தங்கமயில் ஆகியோரின் அன்புச் சகோதரியும் குணலக்ஷ்மி, இரஞ்சினி ஆகியோரின் அன்புச் தாயும் பழனிநாதன், பிறேம்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரணவராஜ், வைஸ்ணவி, கபிலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.05.2023 இன்று திங்கட்கிழமை மதியம் 1.00 மணியளவில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
(15595) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரவளையில் பாடசாலை மாணவியை கடத்த முயற்சி சந்தேகநபர்களை கைது செய்ய விசேட பொலிஸ் குழு

(பண்டாரவளை)

பண்டாரவளை நகரிலுள்ள பாடசாலை ஒன்றில் 6 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் 10 வயதுடைய மாணவியை வானில் கடத்திச் செல்ல மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்துள்ளதாகவும் சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை துஹுல் கொல்ல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 6 ஆம் ஆண்டு கல்வி கற்கும் மாணவியையே நேற்று கடத்திச் செல்ல வானில் குழுவொன்று தயாரானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி பாடசாலை முடிந்து வீடு செல்வதற்கு பேருந்துக்காக குறித்த மாணவி தனியாக நடந்து சென்றபோது, தொலைவில் வெள்ளை நிற வான் ஒன்று நின்று கொண்டிருந்தது.

பின்னர் கறுப்புத் துணியால் முகத்தை மூடியிருந்த இளைஞர் ஒருவர், வானில் இருந்து இறங்கி மாணவியின் அருகில் வந்து, "உனது தாயார் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த சொக்லேட்டை உனது தாயார் உன்னிடம் கொடுத்து தன்னுடன் வானில் வரச் சொன்னதாகவும்" அந்த மாணவியிடம் கூறியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் அச்சமடைந்த மாணவி, பண்டாரவளை நகரில் உள்ள கடைக்கு ஓடிச் சென்று தனது நிலையைக் கூறியுள்ளார். அதனையடுத்து இது தொடர்பில் தாயாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர், மாணவி தனது தாயுடன் சென்று பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து, சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கு விசேட பொலிஸ் குழுக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (நி)




# அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல்

## ருவான் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் இடம்பெறும் தற்போதைய ஜனாதிபதியை மீண்டும் ஒரு பதவிக்காலத்திற்காக தெரிவு செய்வது அவசியம் என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிதலைவர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த வேண்டும் என்றால் தற்போதைய ஜனாதிபதி ஐந்து வருடங்களிற்கு ஆட்சி புரிய வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிரேக்கம் பொருளாதார நெருக்கடியிலிருந்து ஓரளவு மீள்வதற்கு பத்து வருடங்கள் பிடித்தது.

ஆனால் இலங்கை குறுகிய காலத்திற்குள் ஸ்திரத்தன்மையை நோக்கி நகர்ந்துள்ளது. இதன் காரணமாக விக்கிரமசிங்கவே நாட்டை ஆளவேண்டும் என என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.



அனைத்துக் கட்சிகளும் பேதங்களை கைவிட்டு நாட்டின் நன்மைக்காக தேசிய கொள்கைகளை உருவாக்க ஐக்கியப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# அசுபினி எல்ல நீர் விநியோகத் திட்டம் மக்கள் பாவனைக்கு கையளிப்பு



(கேகாலை)

கேகாலை - ஹெம்மாத்தகம "அசுபினி எல்ல நீர் விநியோகத் திட்டம்" ஜனா திபதியினால் பொதுமக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

கேகாலை மாவட்டத்தின் அரநாயக்க, மாவனல்ல, ரம்புக்கன பிரதேச செயலகங்களுக்குரிய 135 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நிலவிய குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் இலங்கை அரசாங்கத்தின் 3,847 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு, நெதர்லாந்து அரசாங்கத்தின் 18,650 மில்லியன் ரூபா கடனுதவியின் கீழ்.இந்த நீர் விநியோகத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (நி)

# இராசிபலன்

22.05.2023
வைகாசி 08, திங்கட்கிழமை
திருதியை முன்னிரவு 11.34 மணிவரை

மிருகசீரிடம் முற்பகல் 10.57 மணிவரை
சுபநேரம் -11.52-1.22 மணிவரை
இராகுகாலம்-7.22-8.52 மணிவரை

அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம் - விசாகம் ,அனுசம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள் , புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

உறவினர் வகையில் மன நிறைவான செய்தியொன்று வந்த சேரலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், சிலர் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம்.

எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய 'நாள், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு.

ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், போசன சுகமுண்டு.

நட்பு வட்டம் விரிவடையும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அழகான பெண் நினைத்தால் ஓர் ஆடவனின் மனப் போக்கையே மாற்றி விடலாம்.

# மிருசுவிலில் கார்- ஹயஸ் மோதி விபத்து -ஒருவர் காயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசுவில் மருத்துவமனை முன்பாக ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

ஹயஸ் வாகனத்துடன் கார் மோதியதில் மேற்படி விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது ஹயஸ் வாகனத்தில் பயணித்த நபர் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த கொடிகாமப் பொலிஸார் விபத்தினை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கார் சாரதியை கைது செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-30)

## கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் மஹோற்சவப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயிலின் மஹோற்சவப் பெருவிழா நாளை 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் மஹோற்சவம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் 3 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (க)



முல்லைத்தீவு சவாரி சங்கம் நடத்தும் மாட்டுவண்டி சவாரிப் போட்டியும் மாணவர்களுக்கு கௌரவிப்பு நிகழ்வும் முல்லைத்தீவு மாவட்டத்தின் சவாரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கும் கராத்தே மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படடன. மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியும் கராத்தே மாணவர்களுக்கான சீருடையும் வழங்கி வைக்கப்ட்டன. இந்நிகழ்வில் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட சவாரிச்சங்க உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படம் -தேவானந்தன்)

# நாட்டு நிலைமை காரணமாக கல்வி அமைச்சில் இலவச தேநீர் விநியோகம் இடைநிறுத்தம்

## யாழில் கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

நாட்டில் நிலவி வருகின்ற நிதி நெருக்கடி நிலைமை காரணமாக கல்வி அமைச்சில் பணிபுரியும் 1300 பணியாளர்களுக்கு காலை மற்றும் மாலை நேர இலவச தேநீர் வழங்கல் தடைப்பட்டிருப்பதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வரணி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்

நாட்டின் நிதி நிலைமையைப் பார்த்து அனைத்து விடயத்திலும் சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நாட்டு நிலைமை சீராக இருந்த போது கல்வி அமைச்சில் பணிபுரியும் 1300 உத்தியோகத்தர்களுக்கும் காலை மற்றும் மாலை வேளைகளில் இலவச தேநீர் வழங்கப்பட்டது.

இருப்பினும் அது தற்போது நாட்டு நிலைமை காரணமாக தடைப்பட்டுள்ளது. கல்வி அமைச்சில் 1300 உத்தியோகத்தர்கள் காணப்படுகின்ற போதிலும் தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் வெறுமனே 26 பேர் தான் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியிருந்தார். (நி-30)

# நீதிமன்ற தீர்ப்பினை வலிதற்றதாக்கியதாக மக்கள் பிரதிநிதிகளுக்கு அழைப்பாணை

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் நீதிமன்ற தீர்ப்பினை வலிதற்ற தாக்கியும்,தீர்ப்பிற்கு முரணாக நடந்து கொண்டமைக்காககவும் மக்கள் பிரதிதிகள் மூவரை இன்று சாவகச்சேரி நீதிமன்றிற்கு சமுகமளிக்குமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தாவளை-இயற்றாலை ஊர் எல்லை வீதியை தனியார் ஒருவர் தன்னுடைய காணியுடன் இணைத்து அடைத்து வைத்திருப்பதாக கிராம மக்கள் பிரதேசசபை முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந் நிலையில் இது தொடர்பாக ஆராய்ந்த பிரதேசசபை மற்றும் கொடிகாமப் பொலிஸார் ஆகியோர் இணைந்து



வேலியை அகற்றி பொது வீதியை மக்கள் பாவனைக்காக திறந்து வைத்திருந்தனர்.

இந் நிலையில் மேற்படி மக்களின் போராட்டத்தில் பங்கெடுத்திருந்த உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள் மூவருக்கு நீதிமன்றம் அழைப்பாணை கடிதம் அனுப்பி வைத்துள்ளது.


மேற்படி மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடு 18.01.2021 ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றின் தீர்ப்பினை வலிதற்றதாக்குவதாக நீதிமன்றுக்கு கிடைத்த விண்ணப்பத்தின் அடிப்படையில் அது தொடர்பாக ஆராய்வதற்காக சமுகமளிக்குமாறு நீதிமன்ற பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-30)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்.வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சதுர்த்தி உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபப் பூஜை நடைபெறும் என பிரதம குருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (நி)

# 65 கிலோ எடையுள்ள கஞ்சாப் பொதிகள் மீட்பு



(அராலி)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காரைநகர் பகுதியில் உள்ள காடு ஒன்றில் இருந்து 65 கிலோ எடையுடைய கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், இரண்டு மூடைகளில் 26 பொதிகள் ஆக்கப்பட்ட நிலையில் இந்தக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகள் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளன. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-104)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் மாட்டு வண்டி சவாரிப் போட்டி

(தருமபுரம்)

மாட்டுவண்டி சவாரிப்போட்டி முல்லைத்தீவு மாவட்டத்தில் விஸ்வமடு தொட்டியடி பகுதி சவாரிதிடலில் நேற்று நடைபெற்றது. தினம் கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இருந்து சுமார் 70க்கும் மேற்பட்ட காளைகள் இப்போட்டியில் பங்குபற்றின. இதில் வெற்றி பெற்ற காளைகளுக்கு பெறுமதி மிக்க பரிசல்களும் வழங்கப்பட்டன. (நி-36)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின அழிப்புக்கு நீதிகோரி பிரித்தானிய பிரதமருக்கு முஸ்லிம்கள் மனு கையளிப்பு




(லண்டன்)

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை யுத்தம் இடம்பெற்று 14 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் தாயகம் மற்றும் உலகமெங்கிலுமுள்ள தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அத்துடன் மே 18 ஆம் திகதியை இனப்படுகொலை தினமாக பிரகடனம் செய்து, நீதி தேடும் முயற்சியில் பலவழிகளில் போராடி வருகின்றனர்.

இதே போல பிரித்தானியாவை தளமாக கொண்டு இயங்கும் இனப்படுகொலையை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான சர்வதேச மையமும் பன்முகப்பட்ட முயற்சிகளை எடுத்து வருகின்றது.

இவ்வாறான முயற்சிகளில் ஒன்றாக, தமிழரல்லாத வேற்று இன மக்களுக்கு, இலங்கையில் ஈழத்தமிழருக்கு எதிராக இடம்பெறுவது இனப்படுகொலையே என்பதையும், ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டையும் உணர்த்தி, அவர்களின் ஆதரவை திரட்டும் பணியையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த அடிப்படையில், கடந்த முள்ளிவாய்க்கால் நினைவு நாளில், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான பிரித்தானியா வாழ் முஸ்லிம் மக்களை ஒன்றுதிரட்டி, "இலங்கையில் இனப்படுகொலைக்கு எதிரான முஸ்லிம்கள்" என்ற அமைப்பை ஆரம்பித்துவைத்து, ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக களமிறக்கியுள்ளனர்.

18 ஆம் திகதி தமிழர்களால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டதையடுத்து, 19 ஆம் திகதி, இந்த அமைப்பை சேர்ந்த முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து, பிரித்தானியா மற்றும் வெளிநாடுகளில் வாழும் பாதிக்கப்பட்ட தமிழ் மற்றும் தமிழ் பேசும் முஸ்லிம்களின் சார்பாக, பிரித்தானிய பிரதமருக்கு மனு ஒன்றை கையளித்துள்ளனர். (நி)

# திருமலை துறைமுகத்திற்கு வாங் யூபோ விஜயம்

(திருமலை)

சீன யுனான் ஆளுநர் வாங் யூபோ, தூதர் குய் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபையின் அதிகாரிகளுடன் திருகோணமலை துறைமுகத்திற்கு (சீனா விரிகுடா) விஜயம் செய்தார். இங்கு சர்வதேச வளர்ச்சி ஒத்துழைப்பு குறித்து விவாதிக்கப்பட்டது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 10 இல் சூரி. செவ்
உயரம்:5' 7"
தகைமை/தொழில்:MBBS
எதிர்பார்ப்பு:வைத்தியர், எஞ்சினியர்
தொ.இ: B/13556

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 62 1/2
உயரம்: 5' 11"
தகைமை/தொழில்: A/L சாரதி
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/13558

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
உயரம்:5' 8"
தகைமை/தொழில்: BSc, Computer engineiring,
எதிர்பார்ப்பு:Doctor, Enginer, Teacher
தொ.இ: B/13565

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 28
உயரம் : 5'8"
தகைமை/தொழில்: A/L சுவிஸ்
எதிர்பார்ப்பு: உள்ளூர் பெண்
தொ.இ: B/13570

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 63 1/4
உயரம்:5'7"
தகைமை/தொழில்:பல் வைத்தியர் (பதிவாளர்)
எதிர்பார்ப்பு:MBBS Doctor/ Dental
தொ.இ:G/13655

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா:21 இல் சூரி. செவ்
தகைமை/தொழில்:MBA (UK) CIM (UK) டுபாய்
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/13656

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா:47
தகைமை/தொழில்: HND IT
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம், வெளிநாடு
தொ.இ:G/9102

பிறப்பு: 1995 இந்து
நட்ச்த்திரம்: கேட்டை, 12சூரி. செவ்
கி.பா: 20
உயரம்:5' 7"
தகைமை/தொழில்: ICT Teacher
எதிர்பார்ப்பு: உத்தியோகம், வெளிநாடு
தொ.இ:G/17835

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# எனது 32 ஆண்டு ஆன்மிகப் போராட்டப் பாதையிலே...



**என் அன்பு உள்ளங்களே!**


**ஆளுமை கொண்ட ஆளுநர் ரெஜினோல்ட்குரே அவர்கள்,**

கடந்த மாசி மாதம் மறைந்த வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட்குரே அவர்களின் மரணச்செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியடைந்தேன். அவர் ஒரு சிரேஷ்ட அரசியல்வாதி. மேல்மாகாண முன்னாள் முதலமைச்சர். களுத்துறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். இப்படிப் பல பதவிகளை வசித்திருந்து நாட்டிற்கும் மக்களுக்கும் அளப்பரிய சேவையாற்றினார். இத்தனைக்கும் அவர் ஒரு ஆசிரியர். எமது தேவஸ்தானத்தில் அமைந்துள்ள தம்பையா சிறிநிவாசன் ஞாபகார்த்த கலை அரங்கை திறந்து வைத்த பெருமைக்குரியவர்.

நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, அன்புள்ளம், கருணை, பொறுமை, ஜீவகாருண்ணியம், புரிந்துணர்வு போன்ற குணாம்சங்களைக் கொண்டவர். சிறந்த கல்விமான், பண்பாளன் இவற்றை விட தமிழறிவும் தமிழ்ப் பேச்சாற்றலும் தமிழ் மக்களைக் கவர்ந்தன எனலாம். இது காரணமாக வடபகுதி மக்கள் அவரிடம் சென்று தங்கள் பிரச்சினைகளைக் கூறி அவற்றிற்கு தீர்வு காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறாக வடபகுதி மக்களுக்கு தன்னாலான சேவையை ஆற்றிய ஒருவர் என்றே கூற வேண்டும்.

அமரர் அவர்கள் வடக்கு மாகாண ஆளுநராக கடமை புரியும் காலத்தில் எமது தேவஸ்தானத்திற்கு அடிக்கடி வருகை தந்து ஈசுர விநாயகரை வழிபட்டுச் செல்வார். அமரர் வேற்று மதத்தவராக இருந்தாலும் இறை பக்தி நிறைந்த ஒருவர். எம்மதமும் சம்மதம் என்ற மத நல்லிணக்க கொள்கையைப் பின்பற்றுபவர். ஆன்மிகத்தில் மிக்க நாட்டமுடையவர். ஐயாவின் ஆன்மிகப் போராட்டம் பற்றி நன்கறிவார். இது காரணமாக ஐயாவுடன் ஆன்மீகக் கருத்துக்கள் பரிமாறப்பட்டு ஈசுர விநாயகரின் பெருமைகளையும் சிறப்புக்களையும் அறிந்து கொண்டார். பின்னர் எமது தேவஸ்தானத்திற்கு வரும் வேளைகளில் "சாமி" ஈசுர விநாயகர் என்ன கூறுகின்றார் [illegible] கேட்டுக்கொள்வார்.

அமரர் ஆன்மிகம் பற்றி உரையாடும் போது நான் அவருக்கு ஆன்மிக அரசியலைக் கூறுவேன். அப்போது சாமி அப்படியும் நடக்கலாம் என்று விடை தருவார். எந்த மறுப்பும் தெரிவிக்க மாட்டார்.



இவ்வாறான நிலையில் ஒருமுறை அவரின் தொலைபேசி அழைப்பு வந்தது. சாமி எனக்கு ஜனாதிபதி அவர்களால் உடன் கண்டிக்குப் போகுமாறு இடமாற்ற உத்தரவு வந்துள்ளது. என்ன செய்வது? ஈசுர விநாயகர் என்ன கூறுகின்றார் எனக் கேட்டார். அப்போது அடியேன் கூறினேன். உங்களுக்கு தவறுதலாக இந்த இடமாற்ற உத்தரவு வந்திருக்கின்றது. உங்களை ஈசுர விநாயகர் கைவிடப் போவதில்லை. நீங்கள் கண்டிக்குப் போய் திரும்பி வருவீர்கள் என்றேன். அவ்வளவுதான் ஆளுநரும் மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு கண்டி சென்று விட்டார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அவர்கள் இடமாற்ற உத்தரவை இரத்து செய்து மீண்டும் உடன் வட மாகாணம் செல்லுமாறு உத்தர விடுகின்றார். ஈசுர விநாயகரின் திருவிளையாடலைப் பார்த்தீர்களா? உடன் ஐயாவிற்கு அழைப்பு வருகின்றது. கோயிலை நோக்கி வந்து கொண்டிருக்கின்றோம். சாமி கோயிலிலே நிற்கவும். சில நிமிடங்களில்... கோயிலின் முன்னதாக (அப்போதைய ஆளுநரின் செயலாளர் திருவாளர் இளங்கோவன் இப்போதைய மேன்மை தங்கிய ஜனாதிபதியின் வடகுதி செயலாளர்) உடன் உயரதிகாரிகள் சகிதம் புன்முறுவலுடன் கைகூப்பியவராக அர்ச்சனைத் தட்டுடன் வந்து கூறுகின்றார். சாமி கூறியது அப்ப்படியே நடந்து விட்டது என்றார். அதற்கு ஐயாவின் பதில், அடி யேன் கூறவில்லை. உள்ளே இருக்கும் ஈசுர விநாயகரே கூற வைத்தார் என்பதை நம்புங்கள். அதன் பின்னர் விநாயகருக்கு மாகாண சபையின் தேசிய பொங்கல் விழாவை நடத்துவதற்கு ஆயத்தங்கள் செய்தார். முடியவில்லை. ஈகர விநாயகரோ எனக்கு தேசிய பொங்கல் விழா எதுவும் தேவையில்லை உன் அன்புள்ள பொங்கலே தேவையானது என்று அவரை அழைத்து விட்டார். இது தான் உண்மை. இத்தனை க்கும் இவர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஒருவர் என்பதை அறியத் தருகின்றேன்.

சோழியூரான் - பிறைசூடிக்குரு,
(ஆன்மிகவாதியும் - சந்ததிப்பூசகரும் பரிபாலகரும்)

(15582)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 143

# உன்னைப்போல் பிறரையும் நேசி



சிரியாவிலுள்ள ஒரு பள்ளியில் நடந்த அற்புதமான ஒரு நிகழ்வு இது.

ஓர் ஆசிரியை பாடவேளையின் இறுதியில் மாணவிகளை ஊக்குவிக்க சிறிய தேர்வை நடத்தினார்.

அதில் வெற்றி பெறும் மாணவிக்கு புதியதொரு ஜோடி காலணி வழங்கப்படும் என்றும் கூறினார். அனைத்து மாணவிகளும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தேர்வு எழுதினர்.

இறுதியில் அவர்களது விடைகளை பரிசீலித்துப் பார்த்த பொழுது அவர்கள் அனைவரும் சரியான விடைகளை எழுதி இருந்தனர்.

ஆசிரியை யாருக்கு பரிசினை வழங் குவது என்று சிந்தித்து விட்டு ஒரு பெட்டியில் அனைவரும் அவரவர் பெயர்களை ஒரு தாளில் எழுதி சுருட்டிப் போடுமாறு சொன்னார். அனைவரும் எழுதிப் போடவே ஆசிரியை அப்பெட்டியைக் குலுக்கி அதில் ஒரு தாளை எடுத்தார்.

அதில் "வபாஃ" என்ற மாணவியின் பெயர் காணப்படவே அம்மாணவிக்குப் பரிசு வழங்கப் பட்டது. அம்மாணவி தான் அவ்வகுப்பில் மிகவும் ஏழ்மையான மாணவி. பல காலமாகவே தேய்ந்து போயிருந்த காலணிகளை அணிந்து வந்த அம்மாணவிக்கோ எல்லையில்லா மகிழ்ச்சி.

பின்னர் அவ் ஆசிரியை மகிழ்ச்சியுடன் வீட்டுக்கு வந்து நடந்த நிகழ்வைப் பற்றி கணவரிடம் கண்ணீருடன் கூறினார். கணவனும் மகிழ்ச்சி அடைந்தார்.

எனினும் அவ்ஆசிரியை வழக்கத்துக்கு மாறாக தொடர்ந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார்.

கணவர் மீண்டும் காரணம் கேட்க "நான் வீட்டுக்கு வந்து பெயர்கள் இடப்பட்ட அப்பெட்டியில் இருந்த தாள்களை பிரித்துப் பார்த்தேன். அதில் அனைத்து மாணவிகளும் தங்களது பெயர்களை எழுதாமல் வகுப்பில் ஏழை மாணவியாக இருந்த "வபாஃ" வின் பெயரையே எழுதியிருந்தனர்". என்று கண்ணீருடன் பதிலளித்தார்.

"தன்னை விட அதிகம் தேவையில் உள்ள பிறர் மீது அக்கறை கொண்டு அவர்களை முன்னிலைப் படுத்தும் பிள்ளைகளாக நமது பிள்ளைகளை வளர்ப்பது நமது கடமையாகும்".

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் Valampurii@yahoo.com இலக்கத்திற்கு அல்லது எனும் E.Mail இற்கு அனுப்பி வையுங்கள்

# ராஜிவ் காந்தியை கொலை செய்த பயங்கரவாத அமைப்பையே அழித்தோம்

## அலிசப்ரி டுவிட்

(கொழும்பு)

32 வருடங்களுக்கு முன்னர் இந்தியா வின் முன்னாள் பிரதமரை கொலை செய்த பயங்கரவாத அமைப்பை 14 வருடங்களுக்கு முன்னர் இலங்கை அழித்தது என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்

ராஜிவ்காந்தி கொல்லப்பட்ட தினத்தை குறிக்கும் விதத்தில் டுவிட்டரில் அலிசப்ரி இந்த கருத்தினை பதிவு செய்துள்ளார்.

32 வருடங்களிற்கு முன்னர் விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் அவர்களின் நிதி திரட்டும் சர்வதேச வலையமைப்பினர்,அரசியல் ஆதரவாளர்கள், புலனாய்வாளர்கள் இணைந்து உலகின் மிகப்பெரிய ஜனநாயகத்தின் முன்னாள் பிரதமரை கொலை செய்தனர்.



இலங்கை காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாத இயக்கத்தை 14 வருடங்களிற்கு முன்பு அழித்து. இலங்கையில் அமைதி ,சமாதானத்தை ஏற்படுத்தியது என அலிசப்ரி தெரிவித்துள்ளார். (நி)

# விடுலைப் புலிகளுடனான போர் மட்டுமே முடிவடைந்துள்ளது

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான போர் மட்டுமே முடிந்தது எனவும் ஏனைய போர்கள் தொடர்வதாகவும் தோன் றுகிறது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்பு நகரம் மற்றும் அதன் சுற்றுப் புறங்களைச் சுற்றி பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸாரினால் ஏற்படுத்தப்பட் டிருந்த கடுமையான பாதுகாப்பு வலை யம் பற்றிய முறைசாரா கலந்துரை யாடலின் போதே ஜனாதிபதி இந்த விடயத்தினை தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதன்போது பாதுகாப்பு தரப்பில் உள்ள உயர்மட்ட அதிகாரிகளிடையே ஏற்பட்டு ள்ள முறுகல் களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் மைத்திரி சூடு பிடிக்கும் கொழும்பு அரசியல்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே களமிறக்கப்படுவார் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டம் இடம்பெற்ற போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

"சுதந்திர கட்சி சார்பில் தான் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவேன் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே அறிவித்துள்ளார். இதுவரையில் அந்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை.

எதிர்க்கட்சி தலைவரை ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ள போதிலும். அவருக்கு ஆதரவளிக்குமாறு இதுவரையில் எம்மிடம் எந்தவொரு கோரிக்கையோ அல்லது பேச்சுவார்த்தைக்கான அழைப்போ விடுக்கப்படவில்லை "என தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும்ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியில் சஜித் பிரேமதாஸவே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கப்படுவார் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளராக எதிர்க்கட்சி தலைவர் களமிறக்கப்பட்டாலும், தற்போது பாராளுமன்றத்தில் எதிரணியை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளிடம் அவருக்கான ஆதரவைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தாம் வேட்பாளராக போட்டியிட வாய்ப்புள்ளதாக முன்னாள் இராணுவ தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 550 | 600 | 450 | 700 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 200 | 200 |
| தக்காளி | 350 | 450 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| கோவா | 400 | 400 | 450 | 450 |
| கரட் | 200 | 330 | 400 | 400 |
| பூசணி | 80 | 100 | 80 | 100 |
| புடோல் | 160 | 180 | 120 | 300 |
| வாழைக்காய் | 100 | 120 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 120 | 150 |
| பாகற்காய் | 550 | 1000 | 450 | 500 |
| வெண்டக்காய் | 180 | 160 | 120 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 160 |
| பயற்றங்காய் | 300 | 300 | 250 | 300 |
| லீக்ஸ் | 360 | 340 | 400 | 400 |
| பீற்றூட் | 250 | 250 | 300 | 400 |
| கறிமிளகாய் | 350 | 300 | 250 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 600 | 1000 |
| போஞ்சி | 500 | 550 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 500 | 350 | 350 | 600 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 150 | 100 |
| தேசிக்காய் | 350 | 400 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 80-110 |
| இராசவள்ளி | 350 | 300 | 250 | 350 |
| வெங்காயப்பூ | 500 | — | 600 | 600 |
| முள்ளங்கி | 100 | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 120 | 40 | 40 |
| ஈரப்பலா | 100 | — | — | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யா மீதான பொருளாதார தடைகளை கடுமையாக்க ஜி-7 நாடுகள் தீர்மானம்

(ஹிரோஷிமா)

**ரஷ்யா மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடைகளை கடுமையாக்க ஜி-7 அமைப்பில் உள்ள உறுப்பு நாடுகள் தீர்மானித்துள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.**



உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு கடும் கண்டனம் தெரிவித்து ஜி-7 மாநாட்டின் உறுப்பு நாடுகள் கூட்டறிக்கை வெளியிட்டன.

ஜி-7 என்பது அமெரிக்கா, பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, ஜப்பான் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளால் உருவாக்கப்பட்ட அமைப்பாகும்.

இந்த முறை, இந்த மாநாட்டிற்கு பல நாடுகளின் தலைவர்கள் அழைக்கப்பட்டனர்.

அதன்படி, உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலென்ஸ்கியும் பங்கேற்றுள்ளார். (நி)

## காட்டுத்தீ காரணமாக கனடாவின் அல்பேர்டாவில் அவசரகால நிலை பிரகடனம்



(ஒட்டாவா)

காட்டுத்தீ காரணமாக நான்கு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வசிக்கும் கனடாவின் அல்பேர்டா மாகாணம் முழுவதும் அவசரகால நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

காட்டுத்தீ காரணமாக 782,000 ஹெக்டேர் நிலங்கள், கால்பந்து மைதானங்கள் உட்பட 3,000 சதுர மைல்களுக்கு மேல் எரிந்துள்ளன என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கனடா மற்றும் அமெரிக்கா முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான தீயணைப்பு வீரர்கள், ஊழியர்கள் காட்டுத்தீ பரவாமல் தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இருப்பினும் அல்பேர்டாவில் 93 பகுதிகளில் காட்டுத்தீ தொடர்ந்தும் பரவி வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த காட்டுத்தீ மிகவும் மோசமான பதிவுகளில் ஒன்றாக இருக்கலாம் என ஆரம்ப தரவுகள் தெரிவிக்கின்றன. (நி)

## செயற்கைக் கால்களுடன் எவரெஸ்டில் ஏறி சாதனை



(லண்டன்)


தனது இரண்டு கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் செயற்கைக் கால்களுடன் உலகின் மிக உயரமான சிகரத்தை ஏறி பிரித்தானிய முன்னாள் இராணுவ வீரர் சாதனை படைத்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை 43 வயதான ஹறி புத்தமகர், 8848.86 மீற்றர் உச்சத்தை எட்டினார்.

இரண்டு கால்களை இழந்த பிரித்தானிய முன்னாள் இராணுவ வீரர் ஹரிபுத்தமகர், அந்த பிரிவில் எவரெஸ்ட் சிகரத்தை ஏறிய முதல் நபர் என்ற வரலாற்று சாதனையை படைத்துள்ளார் என சுற்றுலாத்துறை அதிகாரி தெரிவித்தார்.

கடந்த 2010 ஆம் ஆண்டில் பிரித்தானிய அரசாங்கத்திற்காக ஆப்கானிஸ்தானில் நடந்த போரின் போது பிரித்தானிய கோர்காவின் சிப்பாயாக போரிட்ட புத்தமகர் தனது இரண்டு கால்களையும் இழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நரேந்திரமோடி-உக்ரைன் ஜனாதிபதி சந்திப்பு



(டில்லி)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலன்ஸ்கியை சந்தித்துள்ளார்.

ஜி-7 நாடுகளின் தலைவர்களது மாநாடு ஜப்பானின் ஹீரோஸிமா நகரில் இடம்பெறும் நிலையில், அங்கு விஜயம் செய்துள்ள குறித்த இருவரும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

ஜி-7 நாடுகளின் மாநாட்டுக்கு பக்க அமர்வாக இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர, தனிப்பட்ட முறையில் தம்மால் இயன்ற அனைத்தையும் செய்வதாக, உக்ரைன் ஜனாதிபதியிடம் இந்தியப் பிரதமர் உறுதியளித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக்கிற்கும் உக்ரைன் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பும் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

### ராஜிவ் காந்தியின் 32 ஆவது நினைவுதினம்

## சோனியா, ராகுல் அஞ்சலி



(டில்லி)

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியின்32 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு டெல்லியில் அவரது நினைவிடத்தில் காங்கிரஸ் பாராளுமன்றத் தலைவர் சோனியா காந்தி, தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி ஆகியோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். கடந்த 1991 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி சென்னைக்கு அருகில் உள்ள ஸ்ரீபெரும் புதூரில் நடந்த மனித வெடி குண்டு தாக்குதலில் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி உயிரிழந்தமை நினைவுகூரத்தக்கது. (நி)

## சூடான் தலைநகரில் மீண்டும் கடும் வான்வழித் தாக்குதல்

### கட்டார் தூதரகம் சூறை

(கார்டூம்)

ஆபிரிக்க நாடான சூடானில் அதிகாரத்தை கைப்பற்றுவதில் இராணுவம்-துணை இராணுவம் இடையே உள்நாட்டு போர் மூண்டுள்ளது.

இதில் பொதுமக்கள் உட்பட 500 இற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

அங்கு சில நாட்களாக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. மேலும் சவுதி அரேபியாவில் இருதரப்புக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தலைநகர் கார்டூமில் கடும் வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டது. இராணுவ நிலைகளை குறிவைத்து குண்டுகள் வீசப்பட்டன. இது அந்த நகரத்தை உலுக்கியது. மேலும் கட்டார் நாட்டு தூதரகத்துக்குள் ஆயுத தாங்கிகளுடன் சிலர் புகுந்து சூறையாடினர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## இளநீர்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name- cocos nuaifere

Eng- Tender fruit/ king coconut

தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால் பிள்ளையானவன் தன்னை பெற்று வளர்த்த தாய் தந்தையர்களுக்கு அவர்கள் தள்ளாத காலத்தில் எவ்வாறு கடமைப்பட்டுள்ளானோ அவ்வாறே தென்னம் பிள்ளையும் தன்னை வைத்து வளர்த்தவர்களை தன் தலையிலுள்ள காய்களால் உதவி புரிகிறது.

முதிராத இளந் தேங்காய்க்கு இளநீர் என்பது பெயர்.

சுவை- இனிப்பு, தன்மை- தட்பம்,பிரிவு- இனிப்பு

செய்கை-

குளிர்ச்சி யுண்டாக்கி - Refrigerant

உள்ளழலாற்றி- Demulcent

மலமிளக்கி- Aperient

அற்ப சிறுநீர் பெருக்கி- Mild Diuretic

இளநீரை அருந்த நீர் வேட்கை தீரும்.

மேலும் இதை சிறுநீர் பெருக்கி மருந்துகளுடன் சேர்த்து உள்ளுக்கு கொடுக்கலாம். குளிர்ச்சித் தைலங்களிலும் கண் நோய் மருந்துகளிலும் சேர்க்கப்படுகிறது.

சாதாரணமாக எங்கும் கிடைக்கக் கூடிய

"இளநீரால் வாத பித்த மேகு மனதுர்
தெளிவாய்த் துலங்குமிரு திஷ்டிக் - கௌிவுங்
குளிர்ச்சியுமுண்டாகுங் கொடியவனால் நீங்குந்
தளிர்ந்த கண நொய் தாகுஞ் சாற்று"

**பொருள்**- தொடர்ந்து இளநீர் பருகினால் வாத பித்த நோய்கள் வெப்பம் உடல் பெருக்கம் பயித்தியம் கபம் கழிச்சல் வாந்தி ஆகியவை நீங்கும் நீர் இறங்கும் உடல் அழகும் குளிர்ச்சியுமுண்டாகும்.

சாதாரணமாக எங்கும் கிடைக்க கூடிய பச்சை இளநீரை போலவே வேறு சில இனங்களும் உண்டு.

அவைகள் உருவத்திலும் நிறத்திலும் அளவிலும் குணத்திலும் ஒன்றுக் கொன்று பேதப்படும்.

இளநீர் வகைகள்-

அடுக்கிள நீர், ஆயிரங் கச்சி இளநீர் , கருவிளநீர், குண்டற் கச்சி இளநீர், கெவுளி பாத்திரை இளநீர், கேளி இளநீர்,செவ்விள நீர்,சோரி இளநீர் பச்சை இளநீர், மஞ்சள் கச்சி இளநீர்.

மேற் கூறப்பட்ட இளநீர் வகைகளில் பச்சை இளநீர் மருத்துவத்தில் சிறந்தது. இவ் பச்சை இளநீரை வயிற்றுப் புண் உள்ளவர்கள் மட்டையோடு இளநீர் அடுப்பிலிட்டு சுட்டு அவ் இளநீரை அருந்தி வர வயிற்றுப்புண் மாறும்.

**பச்சை இளநீர்**

"பச்சிள நீர் மேகம் பழஞ்
சுரங்களைப் போக்கும்
கச்சு முலை மாதே கபமறுக்கு- மெச்ச
வயிற்றிற் கிருமியொடு வன் சொறி கண்டோடம்
அயர்த்தோடச் செய்யுமறி"

இதனால் மேகம், பழைய சுரம், கபம் , எறி கிருமி, யானைச் சொறி, கண்நோய் இவைகள் நீங்கும்.

கூடுதலாக எமது உடலில்



ஏற்படும் நீர் இழப்பை தடுக்க கூடிய வகையில் இவ் பச்சை இளநீரை பயன்படுத்தலாம். இதில் விற்றமின்கள் கனியுப்புக்கள் கூடுதலாக காணப்படுகிறது மற்றும் Digested Carbohyvrate பொட்டாசியம் , சோடியம், மக்னீசியம் போன்றவைகளும் காணப்படுகிறன. எனவே அதிகம் உடற் பயிற்சி மேற்கொள்ளும் சமயங்களிலும் கழிச்சல், தாகம் நேரங்களிலும் இவ் இளநீரை பயன்படுத்தலாம்.

**அடுக்கிளநீர்**

" அடுக்கிளநீரையத்தை யண்டாத கற்றும்
வடுக்கண்ணாயின்னும் வகுப்போகும்- பகுக்கும் போ
துண்டாற் சுக மெய்து முள்ளாங் கிருமியிதைக்
கண்டாலிறந்து விடுங் காண்"

**பொருள்**- அடுக்கிளநீரை உண்டால் கபரோகத்தை நீக்கும், தூங்கப் போகும் முன் உண்டால் தூக்கம் வரும், கப தோடம், மலக் கிருமி நீங்கும்.

**ஆயிரங்கஞ்சி இளநீர்**

"வேகமுறுந் தீபனமாம் விட் டோடும் வாத கபம்
ஆக மதிற் சேர்ந்த வரிப்பும் போம்- வாகுறு புண்
வாயிரங்கு சீமும் வயிற்று வலியுந் தொலையும் ஆயிரங்கச்சிக் கறி"

வெப்பம் பசி உண்டாவதுடன் வாதகப தொந்தம் சீழ் விரணம் குன்மம் ஆகியவைகளும் நீங்கும்.

**கருவிள நீர்**

"மரு மலர் வாழ் மானே கேள் வையகத்தோர் நித்தங்
க்ருவிள நீருண்ணக் கபமுங்- கிருமி நெளி
புண்ணுங் கரப்பானும் போகுமிகக் காந்தியுறும்
எண்ணுமனப் பூரிப்பாமென்"

கருமை நிற இளநீரால் கப

ஆதிக்கமும் புழு நெளிகின்ற விரணமும் கரப்பானும் நீங் கும் தேஜசும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

**குண்டற் கச்சி இளநீர்**

"அண்டையிலே நின்றார்க் கரோசி கெடுந் தீபனமாங்
கெண்டை விழி மாதரரே கேளின்னுங்- கண்டபடி
குண்டற் கச்சிருக் கொடுந்தாக மாறிவிடும்"
பண்டைப் பழ மலம் போம் பார்

இதனால் அதி தாகம் , பழைய மலம் தங்குதல் ஆகியவை நீங்கும் பசியெடுக்கும்.

**கெவுளி பாத்திரை இளநீர்**

செப்புகின்ற தெங்கினத்தில் தேர் கெவுளி பாத்திரை யென்
றெப்பு மிளநீரை யுண்டக்கால்- இப்புவியில்
மெத்தப் பசியாறும் மெய் யெரிவு தாகமுடன்
பித்தந் தணியுமென்றே பேசு

தாகம், பித்தம், தேக எரிச்சல் முதலியவை நீங்கும். பசியடங்கும்.

**கேளி இளநீர்**

"கேளியுண்ண மேகம் போங் கேளாய் மடமயிலே
நீள கட்டுக் கீட நிலையாதே- தாளாத
தாகமொடு மந்தமறுந் தானே கரப்பனும் போம்
வேக வனலந் தணியுமே"

இரத்த மேகம், மலக்கிருமி, அதி தாகம், மந்தம், கரப்பான், மிகுசுரம் போன்றவற்றை நீக்கும்.

**செவ்விளநீர்**

"பித்தமொரு தாகம் பெருத்த வழி நடையால்
எய்த்தலா யாசமிவை யேகு- நித்தியமுஞ்
செவ்விள நீருண்டக்காற் றீரும் பல கயமும்
அவ்விளநீர்க் கொங்கை மின்னே யாய்"

தினமம் செவ்விளநீர் அருந்தினால் பித்தம், தாகம் மிகுந்த நடையால் ஏற்பட்ட இளைப்பு, அயர்வு, கபம் என்பன நீங்கும்.

**சோரியிள நீர்**

காரி லகு கூந்தற் கருங்கண் மடமயிலே
சோரியிள நீரருந்த சோபை யறுங் கூரியதோர்
பூச்சி கிரமி பொன்றும் பொன் மேனி யாமுடலம்
பேச்சிற்றெளிவுண்டாம் பேசு.

சிவப்பு இளநீரால் சோகை வயிற்றுப் பூச்சி நீங்கும். உடல் அழகு பெறும்.

இளநீரை எந்த நேரம் எப்படி பருகுவது என்பது பற்றி தேரையர் எனும் சித்தர் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

வாத சித்த மீறாது வன் பயித்தியம் தீரும்
கோதின் மலச்சாரும் கொடும் பசியாம் மாதரசே
மீண்டிய நோய் வராது மேனி மினுமினுக்கும்
உண்ட பின்பு நல்விள நீருண்.

வெறும் வயிற்றில் இளநீர் அருந்தக் கூடாது என்று குறிப்பிடுகின்றார். அதாவது காலை மதியம் உணவு உண்ட பின் இளநீரை அருந்தினால் அது சமிபாட்டையும் அனுசேபத்தையும் அதிகரிக்கிறது. மற்றும் வாத பித்த கப தோஷத்தினால் உண்டாகும் நோய்களை தன்னிலைப்படுத்துகிறது.

**மஞ்சள்- கச்சி இளநீர்**

"பித்தம போஞ் சோபை யறும் பேருலகி லியாவர் குந்
தொத்து கபமுந் தொலை யுங்காண்-தத்து கின்ற
பொல்லாப் பழஞ் சுரமும் போகு மஞ்சட் கச்சிக்குப் பொல்லாப் பொன்றில்லை புகல்."

பித்ததோடம் சோகை, சிலேட்டுமம், பழைய சுரம் என்பன நீங்கும்.

காலையில் உணவு உண்பதற்கு முன் இளநீரை அருந்தினால் பசி தீபனத்தை குறைப்பதுடன் வயிற்றுப் புண்ணையும் ஏற்படுத்தலாம். உணவின் பின் இளநீரை அருந்தினால் வாத, பித்த, கப நோய் நீங்கும் மலம் இலகுவாக கழியும் நல்ல பசியை ஏற்படுத்தும். உடலுக்கு நோயை அணுக விடாது உடலுக்கு அழகையும் ஏற்படுத்தும் மட்டையுடன் இளநீரை தண்ணீரில் போட்டு காய்ச்சிய இளநீர் அதை காய்ந்தாறிய இளநீர் என குறிப்பிடலாம்.கூடுதலாக காய்ச்சல் நிலைமைகளிலும் நாட்பட்ட இருமலிலும் இவ்வாறு இவ் இளநீரை பயன்படுத்த லாம்.

எப்பொழுதும் இளநீரை மரத்திலிருந்து குலையாக இறக்கியவுடன் பயன்படுத்தும் போது மருத்துவ பயன்கள் கூடுதலாக கிடைக்கும்.

வழுக்கை உடைய புதிய இளநீரை பருகுவதனால் பித்தம் சம்பந்தமான நோய்கள் தணியும்.

பழைய இளநீரை பயன்படுத்தும் போது சீதழ நோய்களை உண்டாக்குவதுடன் ஜலதோஷத்தையும் உண்டாக்கும்.

**புதிய பழைய இளநீர்**

"புதுயிளநீர் பித்தமறும் பூதலந் தோடுண்ணும்
பதமுடனே யுண்பார் பரிவாய்- நிதநிதமும்
உண்ணப் பழவிள நீருண்டாம் பலகை நோய்
எண்ணிய றிவாயின்
காய்ந்தாறிய இளநீர்
காய்ந்தாறிய இளநீர் காசங் கபந்தீர்க்கு
மாய்ந்திடாத் தாக சுர மாறுங் காண்- ஆய்ந்ததொரு
செவ்விளநீர் பித்தஞ் சிதைக்குங் கெவுளி கொண்டால் எவ்வளவுத் தாபமிலை யெண்டு"

நீரிழிவு நோயாளிகள் இளநீரை பயன்படுத்தலாமா?

இளநீரில் பல இனங்கள் உண்டு. நீரிழிவு நோயாளிகள் முதலில் இனிப்புச் சுவை குறைந்த இளநீரை தெரிவு செய்ய வேண்டும் பொதுவாகவே இளநீரில் எதிர் ஒட்சியேற்ற தன்மைகள் உயிர்ச் சத்துக்கள் தாதுப்புக்கள் மற்றும் முக்கியமாக கிளைசீமிக் இன்ரேக் குறைவாக காணப்படும்.

நீரிழிவு நோயாளிகள் தொடர்ச்சியாக இளநீரை அருந்தக் கூடாது .அதாவது சிறிது சிறிது நாட்கள் கழித்து அருந்த வேண்டும்.

200-250 மி.லீ அளவான இளநீரை அருந்தலாம்.

அனேகமாக இவர்கள் 10-12 மணிக்குள் இளநீரை அருந்த வேண்டும்.

இவர்கள் 250 மி.லீ இளநீரில் திருநீற்றுப்பச்சை விதைகளை 1/2-1 தேக்கரண்டி வீதம் வெந்நீரில் ஊறவிட்டு வடித்து இளநீருடன் சேர்த்து அருந்தலாம்.இந்த விதைக்கு எதிர் ஒட்சியேற்ற தன்மையும் சமிபாட்டை மெதுவாக்கும் தன்மையும் இருப்பதால் இரத்தத்தில் சீனி யின் அளவை விரைவாக அதிகரிக்க செய்யாது எனவே மேற் கூறியவாறு நீரிழிவு நோயாளிகள் இளநீரை பருகலாம்.

எனவே எமத முன்னோர்கள் இளநீரின் வகைகளையும் அறிந்து அவர்களின் வீடுகளுக்கு சுற்றவும் தோப்பு களிலும் வளர்த்து உணவாகவும் மருந்தாகவும் அருந்தி ஆரோக்கியமாக வாழ்ந்துள்ளனர்.

எமது பிரதேச வளங்களினுள் தெங்கு மரங்களும் அடங்கும்.இவ் வகையான மரங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை இக் கட்டுரை விளக்கி கூறியுள்ளது.

எனவே இளநீரை இயற்கைப் பானமாக பயன்படுத்தி ஆரோக்கிய வாழ்வை தக்க வைத்துக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள் 15.05.2023-15.06.2023

## தனுசு

**இரக்க குணத்தால் பிறர் மனதில் இடம்பிடிக்கும் தனுசு இராசிவாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது. உங்கள் இராசிநாதன் குரு பகவான் உங்கள் இராசியைப் பார்க்கிறார். "குரு பார்க்க கோடி நன்மை" என்பதற்கேற்ப நல்ல சந்தர்ப்பங்கள் உங்களை நாடி வரப் போகிறது. தொழில் முன்னேற்றம் உண்டு. தொலை தூரத்தில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் வரும் தகவல்கள் ஆதாயம் தருவதாக அமையும். உத்தியோகத்தில் நீங்கள் எதிர்பாராத விதத்தில் தலைமைப் பதவிகள் தேடிவரலாம். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். மனவலிமையும் பண வலிமையும் பெற்றுள்ள உங்களுக்கு இம்மாதம் இனிய பலன்கள் ஏராளம் நடைபெறும்.

### ராகு-கேது சஞ்சாரம்

பின்னோக்கி நகரும் கிரகமான ராகு பகவான் 5 ஆம் இடத்திலும் கேது பகவான் லாப எஸ்தானத்திலும் வீற்றிருக்கிறார்கள். பஞ்சம ராகுவின் பலத்தால், பூர்வீகச் சொத்துப் பிரச்சினை தலைதூக்கும். உங்களுக்கு கிடைத்த பங்கை விலைக்கு வாங்கிக் கொள்ள பலரும் காத்திருப்பர். பூர்வீகச் சொத்துகளை விற்றுவிட்டுப் புதிய சொத்துகளை வாங்குவீர்கள். பிள்ளைகள் வழியில் சுபகாரியம் நடைபெறும். ஆதாயம் இல்லாத அலைச்சல் ஏற்படலாம். வெளிநாடு செல்லும் வாய்ப்பில் தடைகள் உருவாகும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். என்றாலும் குரு பார்வை இருப்பதால் அவ்வப்போது உடல்நலம் சீராக வழிவகுத்துக் கொள்வீர்கள். மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும்.

### கடக - சுக்கிரன்

வைகாசி 16 ஆம் திகதி கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்குள்ள நீச்சம் பெற்ற செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கள யோக"த்தை உருவாக்குகிறார். உங்கள் இராசிநாதன் குருவிற்கு, சுக்கிரன் பகைக்கிரகம் ஆவார். 6 இற்கு அதிபதியான சுக்கிரன் 12 இற்கு அதிபதியான செவ்வாயோடு இணைவதால் மறைமுக எதிர்ப்புகள் மாறும். மகத்தான காரியங்கள் மகிழ்ச்சி தரும் வகையில் நடைபெறும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு வழக்குகள், பஞ்சாயத்துகள் சாதகமாக அமையும். பொதுவாழ்வில் இருப்பவர் களுக்கு மனக்குழப்பத்தை ஏற்படுத்திய பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும். தொழிலில் வாடிக்கையாளர்களின் ஆதரவு திருப்தி தரும். எதிர்பார்த்த லாபம் எளிதில் கிடைக்கும்.

### ரிஷப - புதன்

வைகாசி 18 ஆம் திகதி ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 7, 10-க்கு அதிபதியான புதன், சூரியனோடு இணைந்து "புத ஆதித்ய யோக"த்தை உருவாக்குகிறார். அதோடு "தர்ம கர்மாதிபதி யோக"மும் செயற்படுவதால், தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். தொழில் வளம் சிறப்பாக அமையும். அரசியல் களத்தில் உள்ளவர்களுக்கு அற்புதமான நேரம் இது. மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும். கூடுதல் பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கலாம். ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்தோடு பணி புரிவீர்கள். காரியங்களை உடனடியாக செய்து முடிக்கும் ஆற்றல் பிறக்கும். நல்லவர்களின் தொடர்பால் நலம் காண்பீர்கள். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்குப் புகழ் கூடும். புதிய பொறுப்புகள் வந்து சேரும். தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இடையூறாக இருந்த மேலதிகாரிகள் விலகிச் செல்வர். கலைஞர்களுக்கு யோகமான நேரம் இது. பெண்களுக்கு குடும்பத்தில் மங்கல ஓசை கேட்க வழி பிறக்கும். கணவன் - மனைவிக்குள் அன்னியோன்யம் அதிகரிக்கும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு இலாகா மாற்றம் வரலாம்.

## மகரம்

**பொறுமையோடு செயற்பட்டு பெருமையைக் குவிக்கும் மகர இராசிவாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி தன ஸ்தானத்தில் இருக்கிறார். 4 ஆம் இடத்தில் குரு பகவான் சஞ்சரிக்கிறார். அர்த்தாஷ்டம குருவாக இருப்பதால் அடிக்கடி ஆரோக்கியத்தில் தொல்லைகள் ஏற்படலாம். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதும், அலைச்சலைக் குறைத்துக் கொள்வதும் நல்லது. பொருளாதாரத்தில் நிறைவு ஏற்பட்டாலும் மனநிம்மதி குறைவாகவே இருக்கும். காரணம் ஏழரைச் சனி நடைபெறுகிறதல்லவா? எனவே எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்யுங்கள். தினந்தோறும் ஒரு பிரச்சினையை சந்தித்துக் கொண்டே இருப்பீர்கள். என்றாலும் தைரியத்தோடு எதையும் எதிர்கொள்ளும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. அனுபவஸ்தர்களின் ஆலோசனைகள் கைகொடுக்கும்.

### ராகு-கேது சஞ்சாரம்

பின்னோக்கி நகர்ந்து செல்லும் கிரகமான ராகு உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். 10 ஆம் இடத்தில் கேது சஞ்சரிக்கிறார். இடமாற்றம், வீடு மாற்றம் ஏற்படலாம். என்றைக்கோ வாங்கிப்போட்ட சொத்துக்கள் இப்பொழுது பலமடங்கு அதிக விலைக்கு விற்பனையாகி மகிழ்விக்கும். புதிய தொழில் தொடங்குவதற்கு மூலதனம் கிடைக்கும். தாயின் உடல்நலம் சீராகும். பிறரைச் சார்ந்து இருப்பவர்கள் தனித்து இயங்க முற்படுவர். அதற்கு உறுதுணையாக நண்பர்கள் இருப்பர்.

### கடக - சுக்கிரன்

வைகாசி 16 ஆம் திகதி கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்குள்ள நீச்சம் பெற்ற செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கள யோக"த்தை உருவாக்குகிறார். உங்கள் இராசிக்கு சப்தம ஸ்தானத்தில் இந்த நிகழ்வு நடைபெறுவதால் குடும்பத்தில் மணிவிழா, மணவிழா போன்ற சுபநிகழ்வுகள் நடைபெறும். வெளிநாட்டு வணிகம் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த இடமாற்றம், இலாகா மாற்றம் வரலாம். தொழில் வெற்றி நடைபோடும். நூதனப் பொருள் சேர்க்கை உண்டு. உறவினர் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் ஒவ்வொன்றாக முடிவிற்கு வரும்.

### ரிஷப புதன் வைகாசி

18 ஆம் திகதி ரிஷப இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், பஞ்சம ஸ்தானத்தில் சூரியனோடு இணைந்து "புத ஆதித்ய யோக"த்தை உருவாக்குவதால், பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும். கண்ணியம் மிக்க நண்பர் ஒருவர் நீங்கள் எண்ணிய காரியத்தை எளிதில் முடித்துக் கொடுப்பார். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு பொறுப்பான பதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் பாராட்டுக்களோடு பணிகளை செய்து முடிப்பீர்கள். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு அதிகார வர்க்கத்தினரின் ஆதரவு கிடைக்கும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு கடின உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகள் கேட்ட சலுகைகளை வழங்குவர். மாணவர்களுக்கு நினைவாற்றல் அதிகரித்து மதிப்பெண் கூடுதலாகப் பெறும் வாய்ப்பு உண்டு. பெண்களுக்கு உடல்நலத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்படுவது நல்லது. சுபநிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறும். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். (தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2833

மதுமிதா




யுவன்




திலானி




சுபாசினி




நவனீதா




கவிநயா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 184





## நாற்பத்திரண்டாம் அத்தியாயம்
### நட்புக்கு அழகா?

வந்தியத்தேவனுடைய முதலாவது எண்ணம், எப்படியாவது கந்தமாறனைக் காப்பாற்ற வேண்டும் என்பது தான். ஆனால் அவனைக் காப்பாற்றும் பிரயத்தனம் முதலில் செய்தால், அவனுடைய கதிதான் நமக்கும் ஏற்படும். ஆகையால் இந்தக் கொடூரக் காவலனை முதலில் சரிப்படுத்த வேண்டும். எனவே, பாய்ந்து சென்றவன் காவலனுடைய கழுத்தில் தன்னுடைய ஒரு கையைச் சுற்றி வளைத்துக் கொண்டான். இன்னொரு கையால் தீவர்த்தியைத் தட்டிவிட்டான். தீவர்த்தி தரையில் விழுந்தது. அதன் ஒளிப் பிழம்பு சுருங்கிப் புகை அதிகமாயிற்று.

காவலனுடைய கழுத்தை ஒரு இறுக்கு இறுக்கி வந்தியத்தேவன் தன் பலத்தையெல்லாம் பிரயோகித்து அவனைக் கீழே தள்ளினான். காவலனுடைய தலை சுரங்கப் பாதையின் சுவரில் மோதியது. அவன் கீழே விழுந்தான். வந்தியத்தேவன் தீவர்த்தியை எடுத்துக் கொண்டு அவன் அருகில் சென்று பார்த்தான். செத்தவனைப் போல் அவன் கிடந்தான்.

ஆயினும் முன்ஜாக்கிரதையுடன் அவன் அங்கவஸ்திரத்தை எடுத்து இரண்டு கையையும் சேர்த்து இறுக்கிக் கட்டினான். இவ்வளவையும் சில விநாடி நேரத்தில் செய்து விட்டுக் கந்தமாறனிடம் ஓடினான். அவன் முதுகில் குத்திய கத்தியுடன் பாதி உடம்பு சுரங்கப் பாதையிலும் பாதி உடல் வெளியிலுமாகக் கிடப்பதைக் கண்டான். அவனுடைய வேலும் பக்கத்தில் விழுந்து கிடந்தது. வந்தியத்தேவன் வெளியில் சென்று கந்தமாறனைப் பிடித்து இழுத்து வெளியேற்றினான். வேலையும் எடுத்துக் கொண்டான். உடனே கதவு தானாகவே மூடிக் கொண்டது.

சுவர் அந்தப் பெரும் இரகசியத்தை மறைத்துக் கொண்டு இருள் வடிவமாக ஓங்கி நின்றது. ஓங்கி அடித்த காற்றிலிருந்து கோட்டைக்கு வெளியே வந்தாகிவிட்டது என்பதை வந்தியத்தேவன் அறிந்து கொண்டான்.

அடர்ந்த மரங்களும் கோட்டைச் சுவர் கொத்தளங்களும் சந்திரனை மறைத்துக் கொண்டிருந்தபடியால் நிலா வெளிச்சம் மிக மிக மங்கலாகத் தெரிந்தது. கந்தமாறனைத் தூக்கி வந்தியத்தேவன் தோளில் போட்டுக் கொண்டான். ஒரு கையில் கந்தமாறனின் வேலையும் எடுத்துக் கொண்டான். ஓர் அடி எடுத்து வைத்தான். சடசடவென்று மண் சரிந்து செங்குத்தாகக் கீழே விழும் உணர்ச்சி ஏற்பட்டது.

சட்டென்று வேலை ஊன்றிக் கொண்டு பெரு முயற்சி செய்து நின்றான். கீழே பார்த்தான். மரங்களும் கோட்டைச் சுவரும் அளித்த நிழலில் நீர்ப் பிரவாகம் தெரிந்தது. அதிவேகமாகப் பிரவாகம் சுழல்கள் சுழிகளுடன் சென்று கொண்டிருந்ததும் ஒருவாறு தெரிந்தது. நல்ல வேளை! கரணம் தப்பினால் மரணம் என்ற கதி நேரிட்டிருக்கலாம்.

கடவுள் காப்பாற்றினார்! அந்தக் கொடும் பாதகக் காவலன் ஆனால் அவனை நொந்து என்ன பயன்? எஜமான் கட்டளையைத் தானே அவன் நிறைவேற்றியிருக்க வேண்டும்! வாசற்படியில் முதுகில் குத்தி அப்படியே இந்தப் பள்ளப் புனல் வெள்ளத்தில் தள்ளிவிட உத்தேசித்திருக்க வேண்டும். நம்முடைய கால் இன்னும் சிறிது சறுக்கி விட்டிருந்தால் இரண்டு பேரும் இந்த ஆற்று மடுவில் விழுந்திருக்க நேர்ந்திருக்கும்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## யானை பல் விளக்குமா?



புத்தக மூட்டையுடன் பள்ளிக்குக் கிளம்பிய அப்பு அம்மாவுக்கு டாட்டா சொல்லிக் கொண்டு புறப்பட்டான். "ஏண்டா இன்னைக்கு குளிச்சியா" என்றாள் அப்புவின் அம்மா. "நேர மாச்சும்மா, நாளைக்கு குளிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு ஓடினான்.

அப்பு ஐந்தாவது படித்துக் கொண்டிருந்தான். வகுப்பில் அவன் தான் முதல் மாணவன். அப்புவின் அம்மாவிற்குப் பெருமையாக இருந்தது.

அடுத்த நாள் வகுப்பிற்குள் நுழைந்ததும் ஆசிரியர் அப்புவிடம் தான் வந்தார். "ஏன் அழுக்கு சட்டையை போட்டுக் கொண்டு வந்திருக்கிறாய், துவைத்துப்போடக் கூடாதா?" என்று ரகசியமாக அவனிடம் கேட்டார். "மறந்திட்டேன் சார்" சமாதானம் சொன்னான் அப்பு. படிப்பில் கெட்டிக்காரனாக விளங்கிய அப்பு ஏனோ தன்னை சுத்தமாக வைத்துக் கொள்வதில் அக்கறை காட்டவில்லை. பல நாட்கள் அப்பு பல் விளக்காமலே பள்ளிக்குப் போயிருக்கிறான்.

அப்போது பையன்கள் இவனிடம் கேட்டால், "யானை பல் விளக்குகிறதா" என்று கிண்டலாகப் பதில் சொல்வான்.

அப்புவின் அம்மாவும் வகுப்பு ஆசிரியரும் பல முறை கூறியும் அவன் தன்னை சுத்தமாக வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தவே இல்லை.

அவன் கவனம் முழுவதும் படிப்பிலேயே இருந்தது. ஆனால் பையன்கள் இவனை "அழுக்கு மாமா" என்று அழைத்தனர்.

அரையாண்டுத் தேர்வு வந்தது. அப்பு விழுந்து விழுந்து படித்தான். முதல் மார்க்கை வேறு யாரும் தட்டி போய்விடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தான்.

"டேய் குளிச்சிட்டுப் போய்ப் படிடா" இது அப்புவின் அம்மா. "குளிக்கிற நேரத்துல ஒரு பாடம் படிக்கலாம்மா" என்பான் அப்பு.

பரீட்சைக்கு இன்னும் இரண்டு நாட்கள் இருந்தது. அப்போது அப்புவுக்கு திடீரென்று பல்வலி வந்தது. வலியோடு பள்ளிக்கூடம் சென்றான்.

மாலை வீட்டிற்கு வருவதற்குள் அவன் முகத்தில் தாடைப் பகுதி பெரியதாக வீங்கிவிட்டது. விண் விண் என்று வலித்தது. உடம்பு அனலாகக் கொதித்தது.

அப்புவின் அம்மாவும் அப்பாவும் கை வைத்தியமாக ஏதோ செய்தார்கள். எதுவும் சரிப்படவில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நல்ல தலைவன் தான் தலைவன் என்பதை வார்த்தைகளால் அல்ல செயலால் உணர்த்துபவனாக இருக்க வேண்டும். - விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பரீட்சை எழுதும் மாணவர்களை சுயமாகப் படிக்க விடுங்கள்

இலங்கையின் வரலாற்றில் 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் க.பொ.த (சா) தர பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய மாணவர்கள் படும் பாடு சொல்லிமாளா.

அந்தளவுக்கு அவர்கள் கல்விச் சுமையால் வதைபட்டுப் போயுள்ளனர்.

அவர்களைத் தனித்துக் கூறினால், அவர்களின் பெற்றோர்கள் நிச்சயம் கோபம் கொள்வர்.

ஏனெனில் தங்கள் பிள்ளைகளை தனியார் கல்வி நிறுவனங்களுக்கு ஏற்றி இறக்கி போதுமடா சாமி என்றாயிற்று.

ஆக, மாணவர்களுடன் அவர்களின் பெற்றோர்களும் வதைபடுகின்றனர் என்று கூறுவதே பொருத்துடையது.

இவ்வாறான வதைபடுதலுக்குப் பல காரணங்கள் உண்டு. அதில் ஒன்று 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற வேண்டிய க.பொ.த (சா) தரப் பரீட்சை எல்லை கடந்து பிற்போடப்பட்டமை.

அதாவது பரீட்சை பிற்போடப்பட்டிருந்தாலும் குறித்த மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களில் சாதாரண தரத்தில் தொடர்ச்சியாக கற்றுக் கொண்டே வருகின்றனர்.

சுருங்கக்கூறின் ஒரு வருடத்தில் நிறைவு செய்யப்படக்கூடிய பாடத்திட்டத்தை தனியார் கல்வி நிறுவனங்கள் 17 மாதங்கள் நடத்தியுள்ளன.

இதைவிட தினந்தோறும் இலட்சார்ச்சனை போல பாடசாலை, கோட்டம், வலயம், மாகாணம் என அவரவர் பங்குக்கு பரீட்சை நடந்து கொண்டே இருக்கிறது.

இதற்கும் மேலாக, தனியார் கல்வி நிறுவனங்கள் நடத்துகின்ற பரீட்சைகளைச் சொல்லவே தேவையில்லை.

**இவை ஒருபுறமிருக்க, சில தனியார் கல்வி நிறுவனங்கள் இரவிரவாக வகுப்புகளை நடத்துகின்றன.**

**இதனால் மாணவர்கள் இரவில் தங்கள் வீடுகளில் இருந்து சுயகற்றலில் ஈடுபட முடியாமல் போகிறது.**

**காலை, மதியம், இரவு என மூன்று வேளையும் தனியார் வகுப்புகளில் குந்தியிருந்து விட்டு வீடுகளுக்கு வந்து எங்ஙனம் படிக்க முடியும்.**

**ஆக, இரவு நேரங்களிலேனும் தனியார் வகுப்புக்களை நிறுத்தினால் நல்லதென்று கூறுவதற்கு நம் மண்ணில் ஒரு கல்வியாளர் இல்லை என்பதுதான் வேதனைக்குரிய விடயம்.**

**இதை நாம் கூறும்போது இரவு நேரத் தனியார் வகுப்புகளை மாணவர்கள் தவிர்க்கலாமே என்று யார் கூறினாலும் அதற்குள் நியாயத்துவம் இல்லை என்றே கூறவேண்டும்.**

ஏனெனில் ஆசிரியர்களின் வார்த்தைகளைத் தட்டிக் கழிக்கக்கூடிய திராணி மாணவர்களுக்கு இல்லை. அவர்களைப் பொறுத்தவரை ஆசியர் சொல்லிவிட்டார். ஆகவே எந்நேரமாயினும் வகுப்புகளுக்குச் செல்ல வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடாக இருக்கும்.

**எனவே இனியேனும் அந்த மாணவர்கள் வீடுகளில் இருந்து தாமாகக் கற்பதற்குத் தனியார் கல்வி நிறுவ்னங்கள் உதவ வேண்டும்.**

**படித்ததை மீளப் படிக்கவும் சிந்திக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்படாவிட்டால், இதுகாறும் கற்றதால் பயன் ஏதுமில்லை என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டும்.**

# கடன் மறுசீரமைப்பு திட்டம் செப்டெம்பருக்குள் நிறைவடையும்

## ஜனாதிபதி நம்பிக்கை

(கொழும்பு)

கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை செப்டெம்பர் மாதத்திற்குள் இலங்கை வெற்றிகரமாக நிறைவு செய்து பொருளாதாரத்தை ஒரு நிலையான நிலைக்கு கொண்டு வர முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த பொருளாதாரக் கொள்கைக்கு பொதுஜன பெரமுனவும் தேவையான ஆதரவை வழங்கியது.

இந்த நாடு மீள வேண்டுமானால் அந்த ஆதரவு மிகவும் முக்கியமானது. இந்தநிலையில் பொருளாதார நெருக்கடியில் இருந்து. திவால் நிலையில் இருந்து வளமான் நாட்டைக் கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒன்றிணைந்து கடுமையாக உழைக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கை வங்குரோத்து நாடாக அறிவிக்கப்பட்ட பின்னர் முதலீட்டாளர்கள் எவரும் நாட்டுக்கு வரவில்லை.

இந்த சூழ்நிலையிலேயே நாட்டின் பொருளாதாரத்தை நிலையான நிலைக்கு கொண்டு வர சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லவேண்டியேற்பட்டது.

சிங்களவராக இருந்தாலும் சரி, தமிழர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் பிச்சைக்காரர்களாக வாழ விரும்புவதில்லை. அவர்கள் கண்ணியத்துடனேயே வாழ விரும்புகின்றனர்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடுமையான நிபந்தனைகளை விதித்திருந்தது. ஆனால் இலங்கைக்கு அவற்றை நிறைவேற்றுவதை தவிர வேறு வழிகள் இல்லை என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## வட்டுக்கோட்டையில் வயலுக்குள் பாய்ந்தது இ.போ.ச பேருந்து

### ஜே.சி.பி இயந்திர உதவியுடன் மீட்பு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் வயலுக்குள் பாய்ந்த இலங்கை போக்குவரத்து சபை பேருந்து ஜேசிபி இயந்திரத்தின் உதவியுடன் பொதுமக்களால் மீட்கப்பட்டது.

நேற்று மதியம் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் பயணித்த இப் பேருந்து கட்டுப்பாட்டை இழந்து வயல்வெளிக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியது.

அதிர்ஷ்டவசமாக பேருந்து பயணிகள் சேவையில் ஈடுபடாத நிலையில் பேருந்தில் ஒரு சில இ.போ.ச ஊழியர்கள் மாத்திரம் பயணித்திருந்தனர்.

இந்நிலையில் விரைந்து செயற்பட்ட பொதுமக்கள் ஜேசிபி இயந்திரத்தின் உதவியுடன் பேருந்தை தூக்கி வீதிக்கு கொண்டு வந்தனர்.

குறித்த சம்பவம் காரணமாக அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. (ம-7)

## வவுனியாவில் நுங்குத் திருவிழா

பாரம்பரிய தமிழர் பறை இசையுடன் நுங்குத் திருவிழா நிகழ்வு வவுனியா, மரக்காரம்பளையில் நேற்றையதினம் இடம்பெற்றது.

பனை மரத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் நோக்குடன் சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் பனம்பொருள் உற்பத்திப்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன், பண்டாரவன்னியன் புத்தகசாலையின் புத்தக கண்காட்சியும் இடம் பெற்றது. இதில் அதிகளவிலான இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டதுடன், கடும் வெப்பத்தை போக்க நுங்கினையும் குடித்து மகிழ்ந்தனர்.

சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில் தொடர்ச்சியாக நான்காவது வருடமாகவும் குறித்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கண்டியில் சினிமா பாணியில் நடந்த பாரிய கொள்ளை

(கண்டி)

கண்டியில் பிரபல மாணிக்ககல் விற்பனை நிலையத்தில் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விற்பனை நிலையத்திற்குள் புகுந்த கும்பல் ஒன்று 80 இலட்சம் ரூபாய் பெறுமதியான நீலமாணிக்கக் கல்லை சூட்சுமமான முறையில் திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த மாணிக்கக் கல்லில் பரிசோதிப்பதாக கூறி போலியான நீலக் கண்ணாடியை வைத்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கோடீஸ்வரர் போல் வேடமணிந்த நபர் ஒருவர் மேலும் இரு தரகர்களுடன் விற்பனை நிலையத்திற்கு வந்துள்ளனர்.

இந்த மோசடி நபர்கள் ஏற்கனவே மாணிக்கக் கல்லின் வடிவத்தைப் பார்த்து அதே வடிவில் போலி மாணிக்கக் கல்லை வெட்டியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தபால் திணைக்களத்திற்கு 7 பில்லியன் ரூபாய் நஷ்டம்

(கொழும்பு)

2022ஆம் ஆண்டில் தபால் திணைக்களத்திற்கு 7 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் அறிக்கையின்படி, தபால் திணைக்களத்தின் வருமானம் 29.6 வீதத்தால் 9.3 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ள போதிலும், செயற்பாட்டுச் செலவுகளும் 15.3 வீதத்தால் அதிகரித்துள்ளன.

2021 ஆம் ஆண்டில் தபால் திணைக்களம் 7.2 பில்லியன் ரூபா நட்டத்தை பதிவு செய்துள்ளது. எனினும் 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டு தபால் திணைக்களத்தின் நட்டம் சற்று குறைந்துள்ளது.

கடந்த ஆண்டு தொலைத்தொடர்பு கட்டணம், உள்நாட்டு தபால் கட்டணம், வெளிநாட்டு தபால் கட்டணம், மற்றும் பிற தபால் சேவைகள் தொடர்பான பல கட்டணங்கள் அதிகரித்த போதிலும்,

தபால் திணைக்களத்தின் நிதி நிலைமை பலவீனமான மட்டத்திலேயே காணப்படுவதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால் திணைக்களத்தின் நிதி நிலையை உயர்த்துவதற்காக, தபால் கட்டணங்களை முறையான திருத்தம், தபால் சேவைகளை தன்னியக்கமாக்குதல், சேவைகளை பல்வகைப்படுத்துதல் மற்றும் நவீன தொழில்நுட்ப முறைகளை உள்ளடக்கிய ஒரு விரிவான அமைப்பு தபால் திணைக்களத்திற்கு அவசியமானது என மத்திய வங்கி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பொலிஸார் துப்பாக்கி சூடு

### நாய் உயிரிழப்பு ; இளைஞன் காயம்

கம்பளை பன்விலதென்ன பிரதேசத்தில் சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையமொன்றில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 19 வயதுடைய இளைஞர் ஒருவர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அந்த வீட்டில் இருந்த நாயும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்திருந்தது.

கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று நேற்று அதிகாலை குறித்த இடத்தை சுற்றிவளைப்பதற்காக சென்றிருந்தனர்.

இதன்போது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீட்டில் வளர்க்கப்பட்ட நாய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது.

குறித்த வீட்டில் இருந்த 19 வயது இளைஞன் ஒருவருக்கும் காலில் துப்பாக்கிச் சூடு பதிவான நிலையில் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7)

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- I

14

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.




இருப்பினும் கரைவலையைப் பயன்படுத்துதல் தற்போது குறைந்துள்ளபடியால் மீன் உற்பத்தியில் அதன் பங்களிப்பானது 25% விடவும் குறைவாகும். கரை வலையின் இரு புறங்களில் உள்ள வலைகள் கயிறுகளாலும் மடி மற்றும் வலையின் நடுப்பகுதி நூல்களாலும் ஆக்கப்பட்டுள்ளன. மேற்படி கரைவலை, கடற்கரையில் இருந்து 2 கி.மீ அல்லது 3 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள கடற் பிரதேசத்தில் வளைக்கப்படுகிறது.


கரைவலையானது பாதைப் படகு மூலமே வளைக்கப்படும். கரைவலையின் ஓர் அந்தம் கடற் கரையில் நிறுத்தப்படும். பாதைப் படகில் கொண்டு செல்லப்பட்ட வலையால் மீன் கூட்டத்தை வளைத்து, மறு அந்தம் மீண்டும் கடற்கரைய்யை நோக்கிக் கொண்டு வரப்படும். அடுத்து 20க்கும் 30 க்கும் இடைப்பட்ட எண்ணிக்கை கொண்ட ஊழியர்களால் கரையை நோக்கி கையால் இழுக்கப்படும். தற்போது இழுப்பதற்கு உழவு இயந்திரங்களைப் பயன்படுத்து கின்றனர்.

விரிவாகக் கூறுவதானால் முதலில் கடற்கரையிலிருந்து கடலில் குறிப்பிட்ட தொலைவுக்கு சிறிய படகில் (எஞ்சின் பொருத்தப்படாத) சென்று ஆங்கில "A" வடிவில் கரை வலையை அமைப்பார்கள்.பின்னர் வலையின் இரு புறமும் கயிறு கட்டி இரண்டு குழுக்களாக கரையில் நின்று ஆண்கள், பெண்கள் என இருவரும் இணைந்து இழுப்பார்கள். கயிறு இழுக்க இழுக்க கடலில் போடப்பட்டிருக்கும் அந்த வலைகள் முழுமையாக பெரிய அளவில் பரந்து விரிய தொடங்கும். அந்த சமயத்தில் அந்தவலைகளில் வரக் கூடிய மீன்கள் அனைத்தும் வெளியே செல்ல முடியாத அளவிற்கு வலைகளில் மீன்கள் சிக்கிவிடும்.

மன்னார்தீவு, கல்பிட்டி மற்றும் அதனைச் சூழவுள்ள தீவுகளிலும் இம் முறையில் வருடம் பூராகவும் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. புதிய (உடன்) மீன்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு உள்ளமையால் கரைவலை மீன்களை நுகர்வோர் பெரிதும் விரும்புவர்.

அக்காலத்தில் தென்னை மரத்தில் இருந்து கிடைக்கும் நாறுகளை பயன்படுத்தி மீன் பிடித்தனர். அதன் பின்னர் சணல், பருத்தி,பட்டு நூல் ஆகியவைகளை கொண்டு தயாரித்த வலைகளால் மீன் பிடித்தனர்.தற்போது நைலான் வலைகளை பயன்படுத்தி கரைவலை முறையில் மீன் பிடித்து வருகின்றனர். கரைவலையை சிங்களத்தில் மா-தெல் என்பர்.





கரைவலை மீன்பிடிப்பில் ஈடுபடக் கூடிய இடத்தில் விசைப்படகுகள் மீன்பிடித்து வருவதால் கரை வலை மீன் பிடிப்பு வலைகள் சேதம் அடைந்துவருகிறது. இந்த முறையில் மீன்பிடிப்பதால் கடல் வளம் பாதிக்கப்படுவதில்லை. இந்த வலையை இழுக்க அதிகளவில் ஆட்கள் தேவைப்படுவதால் லாபம் குறைவு. இதனால் பலர் நவீன முறைக்கு மாறிவிட்டனர்.

### கம்பம் தாங்கிய அள்ளுவலை

கம்பம் தாங்கிய அள்ளு வலை என்பது மீன்களை குறிப்பிட்ட இடத்திற்கு வரவழைத்து பிடிக்க பயன்படுகின்ற வலையாகும். இதனை உயர்த்தும் வலை எனவும் கூறுவர். பகல் வேளைகளில் இரைகள் தூவுவதின் மூலமும் இரவு வேளைகளில் வெளிச்சம் பரவ விடுவதன் மூலமும் மீன்கள் கவர்ந்து வரவழைக்கப்படுகின்றன. வெளிச்சம் அல்லது இரைகள் போடப்படும் இடங்களை நோக்கி வருகின்ற மீன்கூட்டங்கள் ஆயத்தமாக கீழ் வைக்கப்பட்டுள்ள வலையை சடுதியாக மேலே இழுத்து எடுப்பதன் மூலம் பிடிக்கப்படுகின்றன. படகின் இடது. பக்கத்தில் உள்ள வெளிச்சங்களை முதலில் போடுதல் வேண்டும். இவ்வெளிச்சம் 3-4 மணி நேரம் விடப்படும்.




கம்பம் தாங்கிய அள்ளுவலை மீன்பிடி

இவ்வேளை இப்பகுதிக்கு சிறிய மீன்களும் கணவாய் போன்றனவும் வந்து சேருகின்றன. அவ்வேளை படகின் வலது புறம் நீரின் கீழ்ப்பகுதியில் அள்ளு வலையானது சதுரவடிவில் அல்லது சுளகுவடிவில் ஆயத்தமாக வைக்கப்பட்டிருக்கும். இடது புற வெளிச்சத்தில் மீன்கள் வந்தபின் வலதுபுறம் வலையின் மேற்பகுதியில் உள்ள வெளிச்சம் போடப்படும். இடதுபுற வெளிச்சம் அணைக்கப்படும். இதனால் மீன் கூட்டங்கள் வலதுபுறம் வெளிச்சம் நாடி நகரும் இவ்வேளை கீழ்ப்பகுதியில் ஆயத்தமாக இருக்கும் வலை அதில் பொருத்தப்பட்டுள்ள கயிற்றின் உதவியுடன் மெதுவாக மேலே எடுக்கப்படும். அவ்வேளை வலையானது அத்தாங்கு போன்று மேலெழும்போது மீன்கள் அதனுள் அகப்பட்டு கொள்ளுகின்றன. இலங்கை போன்ற நாடுகளில் இம் முறை மிகவும் குறைவாகும்.

### உயர்த்தும் வலை மீன்பிடிப்பு

இவ் வலை ஒரு பக்கம் 10 மீற்றர் கொண்ட சதுர வடிவிலானதாகும். இவ் வலையின் மையத்தில் உள்ள சதுர வடிவிலான பகுதி சிறிய கண்களைக் கொண்ட ஒரு வலையினால் ஆக்கப்பட்டிருக்கும். அதனைச் சுற்றிப் பெரிய கண்களைக் கொண்ட மற்றுமொரு வலையினால் அது தயாரிக்கப்பட்டிருக்கும். வலை, வளைக்கப்பட்டிருக்கையில் வளைவான தோற்றத்தைக் கொண்டிருக்கும். வலையின் அந்தங்களில் நான்கு வடக்கயிறுகள் கட்டப்பட்டிருக்கும். மீனவர்கள் இரு வள்ளங்களில் சென்று வலையின் அந்தங்களில் உள்ள கயிறுகளைப் பிடித்தபடி அதனைக் கடலின் அடிப்பகுதி வரை ஆழ்த்தி விடுவார்கள். வலையின் மீது மீன்கள் ஒன்று திரண்ட பின்னர் வள்ளத்தை நோக்கி வலை இழுக்கப்படும். வலையில் சிக்கிய மீன்களை வள்ளத்தில் கூடையில் சேகரிப்பார்கள். பாணந்துறை தொடக்கம் தங்காலை மற்றும் மட்டக்களப்பு தொடக்கம் திருகோணமலை வரை மீனவர்களால் இவ்வலை மீன்பிடித்தலுக்காகக் கையாளப்படுகிறது. இம் முறையில் மீன் பிடித்தல் ஆழமற்ற கடலில் மேற்கொள்ளப்படும் மீன்பிடி தொழிலாகும்.


உயர்த்தும் வலை


கரைவலை இழுத்தல்


உயர்த்தும் வலை (Lift net)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமானக் குண்டு...

புரம், மயில்வாகனபுரம் காட்டுப்பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது.

யுத்த காலத்தில் கிபீர் விமானத்தில் இருந்து வீசப்பட்ட கீ குண்டே இவ்வாறு கண்டறியப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசவாசி ஒருவர் தருமபுரம் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே இந்த சக்திவாய்ந்த குண்டு கண்டறியப்பட்டுள்ளது.

3 அடி நீளமும் 3 அடி சுற்றுவட்டமும் கொண்ட இந்த குண்டு 15 வருடங்களுக்கு முன்னர் வீசப்பட்டுள்ளது.

இதனை அகற்ற பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## தேசிய இனப்...

டம் சம்பந்தமாக கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நில ஆக்கிரமிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், படுகொலை, அரசியல் கைதிகள் விவகாரம் உள்ளிட்ட விவகாரங்களும் இறுதியாக நடைபெற்ற அதிகாரப்பகிர்வு குறித்த பேச்சுவார்த்தையின் போதும் கூட எவ்விதமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

தீர்வு குறித்து நியாயமான அடிப்படையில் இதய சுத்தியுடன் செயற்படுவதாக இருந்தால் ஜனாதிபதி முதலில் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து முடிவொன்றை எடுத்த பின்னர் தம்மை பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும் என்றும் இரா.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

முடிவுகள் எடுக்கப்படாது தொடர்ச்சியாக பேச்சுக்களை முன்னெடுப்பதானது காலத்தினை வீணடிக்கும் செயற்பாடாகவே அமையும் என்றும் அவ்விதமான நிலைமைகள் தொடர்ந்தால் உரிய தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார். (ம-7)

## கரவெட்டியில்...

மாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் மரண விசாரணையினை மேற்கொண்டார். (ம-7,60)

## தனியார்...

துக் கல்லூரியில் நேற்று இடம் பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாணவர்கள் தற்போது கைத்தொலைபேசிக்குள் மூழ்கி இருக்கிறார்கள். அதிலிருந்து மாணவர்களை விடுபட வைக்க கலைச் செயற்பாடுகளுக்குள் ஈடுபடுத்த வேண்டும். வாரத்தில் ஒரு நாளாவது மாணவர்களை கலைச் செயற்பாடுகளில் ஈடுபட இடமளிக்க வேண்டும்.

என்னுடைய அடுத்த முயற்சி வாரத்தில் ஒருநாள் குறிப்பாக ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புகளுக்கு விடுமுறை வழங்குவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதே எனத் தெரிவித்தார். (ம-7,9)

## முதலீடு...

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், இலங்கை முதலீட்டு சபைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின்போது அவருடன் அமெரிக்க தூதுவராலயத்தை சேர்ந்த பொருளாதார அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

இலங்கையின் தற்போதைய முதலீடு குறித்த விபரங்களை அதிகாரிகளிடம் இருந்து அவர்கள் கேட்டறிந்து கொண்டனர்.

இந்த சந்திப்பின்போது, தற்போது இலங்கையில் முதலீடு செய்வதில் அமெரிக்க முதலீட்டாளர்கள் ஈடுபாடு கொண்டுள்ளதாக அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார். (ம-7)

## நெல் விவசாயி...

சிறுபோகத்தில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு இரசாயன அல்லது சேதன உரங்களை கொள்வனவு செய்வதற்கு மானிய வவுச்சர்கள் வடிவில் நிதி ஒதுக்கீடுகளை வழங்க அரசாங்கம் அண்மையில் தீர்மானித்திருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதியின் பிரகாரம் 650,000 விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுப்பதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஹெக்டேயருக்கு 20,000 ரூபாயும் இரண்டு ஹெக்டேயருக்கு 40,000 ரூபாயும் மானியமாக வழங்கப்படும்.

விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தினால் இவ்வருடம் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள 650,000 விவசாயிகளுக்கு இந்த வவுச்சர்கள் வழங்கப்படுவதாகவும், இந்த வவுச்சர்கள் மூலம் விவசாயிகள் இரசாயன உரங்கள் அல்லது சேதன உரங்களை மாத்திரமே கொள்வனவு செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் விருப்பத்திற்கிணங்க, இரண்டு அரச உர நிறுவனங்களின் மூலம் வழங்கப்படும் இரசாயன அல்லது சேதன உரங் களை அனைத்து உழவர் சேவை மையங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் கொள்முதல் செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## வேலணை...

சமயம் சார்ந்த ஒருவரை அதிபராக நியமிக்கக் கோரி பழையை மாணவர்களும் பெற்றோர்களும் இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இப்போராட்டம் இன்று காலை 7 மணிக்கு கல்லூரி முன்றலில் இடம் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## அனை...

தாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பதிவு செய்யப்படாத மத ஸ்தலங்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## தமிழ்த்...

ராஜா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படுவதற்கான தீர்மானம், தமிழரசுக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும்.

மேலும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு, உடனடிப் பிரச்சினைகளுக்கான தீர்வு ஆகியன தொடர்பாகவும் இந்த மாநாட்டின்போது தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன என்றும் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்துக்கான போட்டிக்களத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் சீ.வி.கே.சிவஞானமும் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சியின் வட்டாரக்கிளைகள் தெரிவு செய்யும் செயற்பாடுகள் யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு மற்றும் மன்னார் உள்ளிட்ட மாவட்டங்களில் முழுமையடையாத காரணத்தினால் குறித்த பணிகள் பூர்த்தி செய்த பின்னர், கட்சியின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மத்தியகுழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பதவிநிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படும் என குறிப்பிட்டுள்ளார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மெகா பவர்
திகதி 2023.05.21
சீட்டிழுப்பு இலக்கம் 1469
D 02 01 13 18 35
D 22 22 26 44 49

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 21/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1576
வெற்றி இலக்கங்கள்
மீனம் 4 2 4 4 8 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.05.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1151
G 03 35 39 52

கொவிசெத
திகதி 2023.05.21
சீட்டிழுப்பு இலக்கம் 3363
K 39 41 63 78
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.05.21
சீட்டிழுப்பு இலக்கம் 430
தனுசு 24 27 44 53 தனுசு
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/05/21
சீட்டிழுப்பு இலக்கம் 5121
R 4 1 6 3 8 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2095
சீட்டிழுப்பு திகதி 2023.05.21
நிறம் செம்மஞ்சள்
தினம் ஞாயிற்றுக்கிழமை
Z 10 32 36 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,099,840/-
DLB

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.05.21
வெற்றி வாரம்: 4256
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 46,004,845.20
வெற்றி இலக்கங்கள் 04 11 14 36 N
DLB

சசிரி
வெற்றி வாரம் 326
சீட்டிழுப்பு திகதி 2023.05.21
வெற்றி இலக்கங்கள் 15 20 22
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,366,940/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,365,690/-
வெற்றி இலக்கங்கள் 27 28 36 43
திகதி 2023-05-21
வெற்றி வாரம் 3807
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 8,469,340/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 37 02 37 42 43
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 331,553,717.00
1271
2023.05.21 ஞாயிறு
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 1921
சீட்டிழுப்பு திகதி: 2023.05.21
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 51,120,935.80
வெற்றி இலக்கங்கள் 48 58 69 74 X
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15587)

**076 825 7716** (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம்; நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - **076 559 3322** (15572)

2022 O/L

## மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு

விஞ்ஞானம் | ஆசிரியர் S.கோபிநாத்

காலம்: மே 22,23 திங்கள், செவ்வாய்க்கிழமை (மாலை 3.30 மணி முதல் 6.30 மணி வரை)

குறிப்புகள்
- ஆர்வமுள்ள வெளி மாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.
- எதிர்பார்க்கை வினாக்களும் பாடக்குறிப்புகளும் வழங்கப்படும்.
- பரீட்சை சுருக்கக் குறிப்புகள் வழங்கப்படும்.
- கட்டணத்தை செலுத்தி கருத்தரங்கில் பங்குபற்ற முடியும். (15594)

## தீபம் கல்வி நிலையம்

டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 077 224 7781 நிர்வாகம்

## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE



அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம் (15337)

077 544 8503

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-6596)




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777




## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6596)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## குத்தகைக்கு தேவை

தனியார் கம்பனிக்கு
வான்/கார்
குத்தகைக்குத் தேவை.

தகுந்த பெறுமானம் வழங்கப்படும் (15558)

**077 971 5379**

நீங்கள் கடுமையாக இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?

இன்றே பாவியுங்கள்

## சித்தாரா துளசி அசமோதகம் பாணி

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த அற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும் சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு, அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMACY. (C-6593)

சந்தைப்படுத்துவோர்:
சிவர் நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 2567
(குறிப்பு : சந்திரச்சந்திக்கு அண்மையில்)

## தவறிவிட்டது

நீர்வேலி தெற்கு, நீர்வேலி எனும் முகவரியை உடைய மரியதாஸ் குலதுங்கராஜேஸ்வரன் (691004570V) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை மற்றும் வங்கி அட்டை அடங்கிய பேர்ஸ் திருநெல்வேலிக்கும் பிரம்படி லேனுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் தொடர்புகொள்ளவும். (15590)

**077 058 3453**

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
1946
08
01



மறைவு
2023
04
23

அன்புடையீர்!

கடந்த 23.04.2023 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம்
அடைந்த எம் குடும்பத் தலைவர்
அமரர்

## எழுத்தாளர் ஐயாத்துரை சண்முகலிங்கம்

### [ குப்பிழான் ஐ.சண்முகன் ]

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 23.05.2023 செவ்வாய்க் கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று புனித அஸ்தி தொண்டைமானாறு செல்வச் சந்நிதி தீர்த்தக்கரையில் கரைக்கப் படும். தொடர்ந்து அமரரின் இல்லத்தில் மு.ப 10.30 மணியளவில் புத்தக வெளி யீட்டு நிகழ்வு, சபீண்டிகரண நிகழ்வுகள் இடம்பெறும். இந் நிகழ்வுகளிலும் அதன் பின்னர் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு
அனைத்து அன்பு உள்ளங்களையும் வேண்டுகிறோம். (C-6600)

மாணிக்கவளவு,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

077 615 8894
021 226 2193

இங்ஙனம் :
குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் 42 பரப்பு காணி விற்பனைக்கு
- யாழ்ப்பாணத்தில் இருந்து அராலி வட்டுக்கோட்டை செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- யாழ் நகரில் இருந்து 1 ½ km தூரத்தில்.
- நான்கு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் (15593)

**077 259 0391, 076 739 0413**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 20 பரப்பு காணி விற்பனைக்கு
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் (15593)

**077 638 5683**
**076 755 8606**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 64 பரப்பு காணி விற்பனைக்கு
- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி)
- கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி (15593)

**076 436 5814**
**077 065 4525**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.